ஸ்ரீ

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர்:—ஸ்ரீவாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 21.] சுக்லஹுல தை-மாசிமீ [ஸஞ்சிகை 6-7

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே(அ)நவத்யா
[ஸ்ரீ பாகவதம். 1.9-23]

ஸ்ரீ:

ஸ்ரீ குணரத்ந கோசம்

[ஸ்ரீ. உப. வித்வாந். ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி]

(ஸஞ்சிகை 5 – பக்கம் 120 தொடர்ச்சி.)

ஸஃபலீகாரிஷிராதோலெக்ஷயமயஷ்யபாங்கை:"— தன்னுடைய அங்கீகார த்யோதகமான கடாக்ஷங்களால் ஸார்த்தகமாகச் செய்கிறவளின் பொருட்டு. ஸார்த்தகம் செய்கிருள் என்பதால் பஹுமுகமாக வையர்த்ய சங்கை வந்ததைக் காட்டுகிறது. ஈச்வரனுக்கும் வைபர்த்ப சங்கையும் தத்ப்ரயுக்தமான சிந்தாவ்யஸநமும் உதித்தது இதனால் தீருகிறது. ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனமான சேதநோஜ்ஜீவந விஷயமாக ஈஸ்வரனுக்குள்ள மநோரதம் வ்யர்த்தமாகாமல் கருணமயமான புருஷகாரமாயிருந்து சேதநர்களை அஞ்ஜலி செய்து உஜ்ஜீவிக்கும்படி செய்விப்பதாக அங்கீகார கடாக்ஷங்களால் ஸார்த்தகம் செய்கிருள். விச்வஸ்ருஷ்டியினால் ஈச்வரனுக்கு ச்ரமாயாஸம் உண்டானல், இவள் கடாக்ஷங்கள் அதைப் பரிஹரிக்கும். விச்வஸ்ருஷ்டி என்கிற பெரிய வ்யாபாரத்தால் ஈச்வரனுக்கு என்னப்ரயோஜநம் ? மந்தனினும் மந்தன் ஈச்வரனென்று கௌதஸ் குதர்கள் செய்யும் சோத்யத்தை தீர்க்க இந்த உத்தமஸ்த்ரீயின் அபிமத பஹுமாந ஆலோகங்களினும் மேற்பட்ட ப்ரயோஜநம் உண்டோ? நாம் ஸம்ஸாரி

யாகவும் குடும்பியாகவும் இருக்க மநோரதித்து விச்வ மென்னும் க்ருஹ நிர்மாணம் செய்ய க்ருஹிணியின் அநுமோதந கடாக்ஷத்தை விடவேறு என்ன ப்ரயோஜநம் ரஸிகனுக்கு வேணும்? மாந்த்ய சங்கை பண்ணுகிறது மந்தம்; அரஸிகம் என்று அந்த சங்கையைத் தீர்த்துக் கொள்ள இந்த கடாக்ஷங்கள் அவகாசம் கொடுக்கின்றன. ஸ்ருஷ்டி செய்வது ஆயாஸ மாயில்லை. அது பலிக்கவேண்டுமே யென்பதும் வ்யஸநமாயில்லை. கௌதஸ் குதர் செய்யும் அப்ரயோஜநத்வ சங்கைக்கு ஸமாதாநம் செய்வதே பெரிய வ்ய ஸநமாயிற்று. இவளுடைய அங்கீகார கடாக்ஷங்கள் ப்ரயோஜந மாகின்றன வென்று சொன்னவுடன் பூர்வ பக்ஷிவாயை மூடிக்கொள்ளவேணும். இது லீலை. ஸ்வயம் ப்ரயோஜநமான லீலைக்கு ப்ரயோஜநாந்தரம் தேட அக்கறை யில்லை யென்று ஸூத்ரகாரர் ஸமாதாநம் சொன்னால், 'இருவராய்ச் சேர்ந்தல்லவோ விளையாடவேணும். ஏகாகியாய் எப்படி விளையாடி ரமிப்பது'' என்று மறுபடியும் ஆக்ஷேபம் வந்துவையர்த்ய சங்கை கிளம்பவே, நித்ய யுவதியான இந்த அபிமத பத்நீ இந்த விளையாட்டில் சேர்ந்து கூட அந்வயிப்பதால் அது பரிஹ்ருதமாகி ஸ்ருஷ்டிக்கு ஸார்த்தக்யம் லபித்தது. லோகத்தில் காண்பது போல் நிஷ்ப்ரத்யூஹப்ரணய கடிதமான தம்பதிகள் இருவருடைய லீலை யென்று ஏகாகித்வ ப்ரயுக்த சங்கை தீர்ந்தது.

மேலும் ஸ்ருஷ்டி என்கிற வ்யாபாரம், ஈச்வரன் அந்தர்யாமியாய், பரம மான அஹமர்த்தமாய், எல்லாவற்றிலும் அநுப்ரவேசித்துத் தானும் சேர்ந்து பஹுவாக வேணும். தான் அஹமர்த்தமாய், வ்யாபிப்பதற்கு அஹந்தையான பிராட்டி ஸம்மதித்துக் கூட அந்வயித்தாலொழிய ஈச்வரன் அஹமர்த்தமாக வ்யாபிப்பது அஸாத்யம். ஸ்ருஷ்டி ஸங்கல்பம் செய்ததே வ்யர்த்தமாய் விடும். ஸத்ய ஸங்கல்பனுடைய ஸ்ருஷ்டி ஸங்கல்பம், இவள் அஹந்தையாய் ஈச்வர னுடைய அஹமர்த்த ஸ்வரூபத்துக்குள் சொருகி நிற்க அங்கீகாரம் செய்தா லொழிய ஸார்த்தக மாகாது. ''நானும் அஹந்தையால் உம்மோடு அந்தர்யாமித் வத்தில் அந்வயிக்கிறேன்; அஞ்ச வேண்டாம்; ஸ்ருஷ்டி ஸார்த்தக மாகட் டும்'' என்று குளிர்ந்த கடாக்ஷங்களால் தன் அங்கீகாரத்தைத் தெரிவிக்கிறாள். இதனாலே தான் அவனுடைய ஸ்ருஷ்டி யென்கிற பெரிய விடாமுயற்சியான வ்யாஸங்கம் ஸார்த்தகமாகிறது. ஸ்ருஷ்டி ஒரு க்ரீடா வ்யஸந மாகையாலும், இவள் அந்வய மில்லாமல் க்ரீடைசம்ப விக்காதா்தலாலும் இவள் அங்கீகார கடா க்ஷத்தால் க்ரீடாரஸம் ஸித்தித்தது. ஸப்தலோகீ க்ருஹஸ்தனாய், வஸுதா குடும்பியாய், அநந்த ப்ரஜைகளோடு கூடிய விச்வ மென்னும் க்ருஹத்தைப் புதிதாய் நிர்மாணம் செய்கையில் லக்ஷ்மீ கடாக்ஷங்களின் அபேக்ஷை அவச் யம். அந்த க்ருஹ ஸ்வாமிக்கு உதிக்கும் க்ருஹிணியின் அங்கீகார கடாக்ஷங் களும் அபேக்ஷிதங்களாகும். க்ருஹம் க்ருஹமல்ல; க்ருஹிணிதான் க்ருஹ மென்று சொல்வர். இங்கே லக்ஷ்மியே க்ருஹிணியாகிறாள். இவள் கடாக்ஷ மில்லாவிடில் எப்படி இந்த நிர்மாணம் ஸார்த்தகமாகும்? பெரியவ்யாபாரத் தின் ஆரம்பத்தில் லக்ஷ்மீ கடாக்ஷத்தைக் காட்டிலும் பெரிய பேறுண்டோ?

தந்துக்களான ப்ரஜைகளை ரக்ஷணம் செய்யும் ஸப்ததந்து வென்னும் யாகத்தில் தீக்ஷிதனாய் ஸ்ருஷ்டியை உபக்ரமிக்கும் பொழுது பத்நியின் அங்கீகார மில்லாமல் எப்படி சேதந ரக்ஷா ஸார்த்தக மாகும்! "கடாக்ஷ ...." என்று இவள் கடாக்ஷ லாபத்தை ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநமாகச் சொல்லும் வசநம் இங்கே ஸ்மரிக்கத்தக்கது' ஜாயமாந புருஷன் மதுஸூதந கடாக்ஷம் பெற்று அதனால் ஸாத்விகனாக வேணும். புருஷஸூக்தத்தில் சொல்லிய புருஷன் அஜாயமானாய் இருந்தாலும் இப்பொழுது 'பஹு ஸ்யாம்' என்று ஸங்கல்பம் செய்து கொண்டு பஹுதா ஜாயமானாகிற பொழுது "................. ...." என்று க்ரூரமாய் நிக்ரஹஸங்கல்பம் செய்யும் இந்தத் தண்டதரன் எப்படி சாந்தனாகி நிக்ரஹ க்ரௌர்யம் தவிர்ந்து ஸத்வகுணமான சாந்தியைப் பெறுவார்? எந்தப் பரதேவதையின் கடாக்ஷம் இவரைச்சாந்தப்படுத்து மென்று சங்கைவர, இந்த லக்ஷ்மீதேவதையின் கடாக்ஷங்களால் இவர் நிக்ரஹ ஸங்கல்ப ரூபமான சூடு தணிந்து இவர் திருவுள்ளம் குளிர்ந்து சேதநர்கள் ரக்ஷிக்கப்பட்டு ஸ்ருஷ்டி ஸார்த்தகமாகும். '................. ....' என்று நாஸ தாஸீயஸூக்தத்திலும், '................. ....' என்று மநு ஸ்ம்ருதியிலும் சொன்னபடி ஒரே அந்தகாரமாய் இருந்தது. '.................' '................. ....' என்று வர்ணிக்கப்படும் இவருடைய ஆலோகங்களின் ப்ரபையால் தமஸ் நிரஸ்தமாகிறது. '.................' என்கிற பஹுவசநத்தால், '................. ....' என்று கூறப்போகிற அநேகத்வம் விவக்ஷிதம்.

க்ருதாஞ்ஜலி:—ஸ்ருஷ்டி நிரர்த்தகமாகாமல் சேதநர்கள் அஞ்ஜலி செய்யும்படி செய்து, அவர்கள் ரக்ஷைக்கு அவகாசம் ஏற்படுத்தி, ஸ்ருஷ்டியைப் பலமாகும்படி செய்வதாகப் பிராட்டி அங்கீகாரம் செய்தது நாம் அஞ்ஜலி செய்தாலல்லவோ ஸார்த்தகமாகவேணும். இதோ அஞ்ஜலி செய்தோம் என்கிறார். க்ருதாபராதரான நமக்கு க்ருதாஞ்ஜலியானலல்லது ப்ரஸாதத்திற்கு வேறு மார்க்கமில்லை. ஸ்ருதியில் "நாந்ய: பந்தா:" என்று சொன்னதற்கு "................. ...." என்கிற திருவடி உபதேசமாகிற உபப்ரஹ்மணத்தால் அஞ்ஜலியைத்தவிர வேறு மார்க்கமில்லையென்று தெளிவிக்கப்பட்டது. இங்கே ஏகவசநத்தால் அஞ்ஜலியின் ஸக்ருத்வம் ஸித்திக்கிறது. "................. ...." என்கிற ந்யாயப்படிக்கும் ஏகத்வம் ஸித்திக்கிறது. "................. ...." என்று தேவன் விஷயத்தில் கூறப்பட்ட அஞ்ஜலிவைபவம் கைமுதிக ந்யாயத்தால் தேவீவிஷயத்தில் ஸித்தம். ப்ரஜைகள் செய்யும் அஞ்ஜலியைக் கூட," அவர்களுக்கு இதுபெரும் சுமை ஆயிற்றே; இதற்கு நாம் எதை அளித்து ஆந்ருண்யம் அடைவோம்!" என்று நினைக்கும் தாயிவள். ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதை இவள் பொறுக்கமாட்டாள். தாய்க்கு ருணம் வைக்கக்கூடாது. அஞ்

ஜலிபோதும். ''தேசமான அணிகலனும் என்கைகூப்புச் செய்கையே'' என்பது போல அநுபவம். குழந்தையின் அஞ்ஜலியைக் கண்டதும் தாய்க்கு உல்லாஸம் அதிகம். ஆழ்வார், திருவடித் தொழுகையில் பெருமாள் திருமுகம் விசித்ரமாய் அலங்க்ருதமாகும்.

> உல்லாஸ பல்லவித பாலித ஸப்தலோகீ
> நிர்வாஹகோரகித நேம கடாக்ஷ லீலாம் ।
> ஸ்ரீரங்க ஹர்ம்யதல மங்கள தீபரேகாம்
> ஸ்ரீரங்கராஜமஹிஷீம் ஶ்ரியமாஶ்ரயாம: ॥

இந்த ஸ்தோத்ரத்தில், பிராட்டியின் கடாக்ஷங்களே ப்ரதாநமாக அநுபவ விஷயம். ''தம் ஆயதாக்ஷீம் ஈக்ஷணா'' என்று இவள் கண்ணழகும் கடாக்ஷங்களும் இவளுக்கு ஏற்றம். அந்வய வ்யதிரேகங்ளால் கார்ய காரண பாவம் ஸித்திக்கும். இவள் கடாக்ஷோல்லாஸத்தால் ஜகத்தின் உல்லாஸம். இவள் கடாக்ஷம் இல்லையானல் ஜகத் இல்லை. இதை நேரில் அநுபவித்த இந்த்ரன் ''த்வயா தேவி பரித்யக்தம்'' இத்யாதி ச்லோகங்களில் பிராட்டி விஷயமான ஸ்துதியில் நிரூபித்தான். ஆளவந்தாரும் ''ஸம்பத் ஸ்வகீய கருணா நிரீக்ஷண'' என்கிற ச்லோகத்தில் அந்வய வ்யதிரேகங்களால் இவள் கடாக்ஷங்களுக்கு ஜகத்தின் அநந்தோதயத்திற்கும் ஸகல ச்ரேய: ப்ராப்திக்கும் காரணத்வத்தை நிரூபித்தார். காரணத்வத்தோடு பலப்ரதத்வத்தையும் நிரூபிக்க வேணும். அரவிந்த லோசநனை பெருமாளுடைய மனத்துக் கினியாள் ஆனதால் ''மனோரதம் பலப்ரதம்'' என்று அவனுக்குச் சொன்ன பலப்ரதத்வத்தால் இவளுடைய பலப்ரதத்வத் திற்குத் தட்டில்லை. இவள் தீர்த்த தாரை சேர்த்துத் தான் கொடுக்கும் அவன் கை கொடுக்க வேணும். தாநத்தில் ''ஸம்பத்த்யோஸஹாயிகாரம்''. சதுச்லோகியின் முதல் இரண்டு ச்லோகங்களை அநுஸரித்து இங்கே முதல் ச்லோகத்தில், '' ஸ்ரீரித்யேவ ச நாம தே'' என்று மஹிமையுடைய திருநாமத்தை முதலில் வைத்து, அங்கே இரண்டாம் ச்லோகத்தில் சொல்லப்பட்ட '' தாம் த்வாம் தாஸ இதிப்ரபந்ந இதி ச'' என்கிற அவள் விஷயமான ப்ரபதநத்தை ச்லோகம் முடிவில் அஞ்ஜலியால் காட்டினர். இவளுடைய ஈஷத்கருணா வீக்ஷணத்தால் ஜகதுதய ஸ்திதிகளை அங்கே மூன்றாவது ச்லோகத்தால் நிரூபித்ததை இங்கே இவளுடைய நேமகடாக்ஷத்தால் ஜகதுல்லாஸ பாலந நிர்வாகங்களை வர்ணிக்கிறார். அங்கே நான்காவது ச்லோகத்திற் கூறிய இச்சா க்ருஹீதாபிமதோரு தேஹங்கள்ளி பரஸ்பர காடோப கூடத்வத்தை இங்கே அடுத்த மூன்றாவது ச்லோகத்தில் ''ஸங்கல்ப ஸந்ததிகளாவிநா ரங்கிநா ரங்கஹ'' என்று வர்ணநம் செய்திருக்கிறார். இவருடைய தாதபாதர்கள் ஸாதித்த ஸ்ரீஸ்தவத்தின் அநுபவமும் இங்கே இவர் திருவுள்ளத்தில் நர்த்தநம் செய்கிறது. அங்கே முதல் ச்லோகத்தில் கூறப்பட்ட விஷயங்களும் தத்ப்ரதிபாதக சப்தங்களும் இங்கே முதலிரண்டு ச்லோகங்களில் ஸம்பூர்ணமாய் அநுஸரிக்கப்படுகின்றன. அங்குள்ள ஸ்ரீஹரி சப்தங்கள் இங்கேயும் க்ரஹிக்கப்பட்டன. ''''ஸ்வஸ்திஸ்ரீதாகே'' என்பது ''மங்கள

தீவரெவா॰'' என்பதால் காட்டப்பட்டது "ஜமெஷஜமதாஂஸமஂ" என்பது "ஸஂஷு திஷிவியாநம்" என்று வைக்கப்பட்டது ஸ்திதியை இரண்டாம் ச்லோகத்தில் வைத்திருக்கிறார். இதற்கெல்லாம் காரணத்வம் ஹரிக்கு ச்ருதமானதை இரண்டிடத்திலும் ஒப்புக்கொண்டு அவருடைய ஸ்ருஷ்டிஸ்திதிகரணம் இவளுடைய திருமுகத்தையும் அங்குள்ள இங்கிதங்களையும் பார்த்துக் கொண்டு ததநீநமாய் நடக்கிற தென்றும் இருவரும் சேர்ந்து ஐகரஸ்யமாய்ச் செய்யும் க்ரீடையாகு மென்றும் பரமவல்லபையான இவள் முகஜாடைகளை அறிந்து கொண்டு இவள் முகோல்லாஸமாய் எல்லாவற்றையும் நடத்தினால் தான் "ரவொவெஸ:" என்று பரம ரஸிகனை ஆநந்தமய புருஷனுக்கு க்ரீடாரஸாநந்தம் பூர்ணமாயிருக்குமென்றும் கூறப்படுகிறது. இவளுடைய திருமுகத்தைப் பார்த்துக் கொண்டு அங்குள்ள இங்கித பராதீநனாய் அகிலத்தையும் விதாநம் செய்த பிறகு, இங்கே முதல் ச்லோகத்தில் கூறியபடி அங்கீகாரயுக்தமான ஆலோகங்களை எதிர் பார்க்க அவச்யமில்லையே; முன்பே இவள் திருவுள்ளம் தெரிந்து கொண்டு அதற்கு அநுகுணமாகத்தானே வ்யாபாரம் செய்ததென்று இரண்டு க்ரந்தங்களில் உள்ள வர்ணநத்துக்கு ஆபாதமாய் விரோத சங்கைவரலாம். இவன் திருவுள்ளத்தைத் தெரிந்து கொண்டு தான் ஈச்வரன் விதாநம் செய்கிறார். இதுவேதான் அவருக்கு ஸ்ருஷ்டியில் ப்ரமாணம் என்று இங்கே பின்னால் கூறப்படுகிறது. இவள் அபீஷ்டத்தை அநுஸரித்துச் செய்கையில் 'செய்தது சரியாயிருக்கிறதா? என்று மறுபடியும் அங்கீகாராபேக்ஷை உசிதம்தான். இதுதான் வால்லப்ய காஷ்டையாகும். அதை நிரூபணம் பண்ணால் தான் இவள் தட்டக் கூடாத புருஷகாரமாவது ஸித்திக்கும். ஸ்ருஷ்டி ஸ்தித்யாதிகளைக்குறித்து இவள் கடாக்ஷங்கள் காரணமாவது நம்முடைய ஸம்ப்ரதாயக்ரந்தங்களில் மட்டும் சொல்லப்படுவதல்ல. ஸர்வ சாஸ்த்ர பாரங்கதரும் ரஸிகஸார்வ பௌமரும் ரஸகங்காதர கர்த்தாவுமான ஜகந்நாதபண்டிதர் லக்ஷ்மீ லஹரியில் முதல் ஐந்து ச்லோகங்களில் இவள் கடாக்ஷங்களையே விசித்ரமாக அநுபவிக்கிறார். அதில் ஐந்தாவது ச்லோகத்தில "ஜமஜ்ஜநஸ்தாநவ ஷையாஅநாஸிஷு நிவஹாண: | உஷஷுக்ஷவீயஷிஷாஂபாயி ஷுஹஸிஷீயா ஊநஹாநு! ஜவாஂமஷெ ஊஷஂஊஊகஞாஷவாநஂஷஊயக்ஷ" என்று இவளுடைய அபாங்கம் ஜகஜ்ஜந்மஸ்தித்யாதி ரசனையில் நிபுண மென்று கூறினார். ஜகத் காரணமாக முதலில் சொல்லப்பட்ட கடாக்ஷங்களையுடைய ஆதிச்ரீயே இந்தப் பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கஹர்ம்ய தலத்தில் ப்ரஜைகளைக் காப்பாற்றுவதற்கு மங்கள தீபரேகையாய் அவதரித்திருக்கிறாள் என்பதையும் காட்டுகிறார்.

"உஷாஸொதாதி—உல்லாஸம் என்பது ஜகத்தினுடைய உல்லாஸமாகவும் சொல்லலாம். இவள் கடாக்ஷோல்லாஸமாகவும் சொல்லலாம். அஞ்ஜலிக்கு அடுத்தாற் போல் தாயான இவளுக்கு உல்லாஸ முண்டாவது உசிதம். இவள் கடாக்ஷோல்லாஸத்தால் ஸப்த லோகங்களும் முதலில் தளிர் விட்டுப் பல விதமாகி, பிறகு வளர்ந்து, பலிதமாகி நிர்வஹிக்கப்படுகிற தென்றும், ஸப்த

லோகிக்கு இப்படி ஏற்படும் வருத்தியினுல் இவளுடைய கடாக்ஷம் கோரகிதம் (மொட்டு விடுதல்) ஆகிறதென்றும் சொல்லலாம். ப்ரபஞ்சத்தைத் திவ்யதம் பதிகளுக்கு ஆராமம் அல்லது உத்யாந மென்று சொல்வர். உத்யாநத்திலுள்ள செடிகள் பல்லவிதமாய்ப் பாலிதமானதை உத்யாநபாலர்களான தம்பதிகள் அப்பொழுதப்பொழுது தளிர்விடுவதையும், அவை பதேபதே வளர்வதையும் பார்த்துப் பார்த்து முகமலர்ச்சியடைவர். "உல்லாஸ பல்லவித" என்பதிரண்டும் ஜகந்நிஷ்ட மென்றும் கொள்ளலாம். ஸ்ரீஸ்தவத்தில் பத்தாவது ச்லோகத்தில் "யஸ்யா: கடாக்ஷம்ருதுவீக்ஷணதீக்ஷணேந" "ஸத்ய: ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ விச்வம் விபர்யய ஸமுத்தவிபர்யயம் ப்ராக் தாம் தேவதேவ மஹிஷீம் ச்ரியமாச்ரயாம:" என்று ஸாதித்தது இந்த ச்லோகத்திற்கு மூல மென்பது ஸ்பஷ்டம். அங்கே விச்வ நிஷ்டமாக உல்லஸித பல்லவத்வ மும் உல்லாஸமும் இவருடைய கடாக்ஷ ம்ருதுவீக்ஷண தீக்ஷணத்தால் ஏற்படுவதாகக் கூறப்பட்டதற்கு அநுகுணமாய் இந்த ச்லோகத்தில் உல் லாஸம் முதல் நிர்வாஹம் வரையில் ப்ரபஞ்சகதமாகக் கொள்ளலாம். 'இவள் கடாக்ஷோல்லாஸத்தால் ப்ரபஞ்சோல்லாஸம், ப்ரபஞ்சோல்லாஸத்தால் கடா க்ஷோல்லாஸம், என்று இது ஒரு சக்ரமாவதாலும், இரண்டு உல்லாஸங்க ளுக்கும் பரஸ்பரம் உத்தரோத்தரம் கார்யகாரணபாவம் இருப்பதாலும் இரண் டர்த்தங்களுக்கும் பலம் ஒன்றே. 'பாலித' என்பது உத்யாநபாலரால் செய் யப்படும் பாநத்தைக் காட்டுகிறது. "ஸப்தலோகீ" என்பது "வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல" என்கிற அநுபவத்தை நினைக்கிறது. மேலும் இது ஸ்ருஷ்டிப்ரகரணமானதால்" "ஸோऽகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய" என்கிற ச்ருதிப்படி வ்யாஹ்ருதி பூர்வகமாக ஸ்ருஷ்டி நடந்ததைக் காட்டுகிறது. "நிர்வாஹ" என்பதால், முன்பு நாமரூப நிர்வஹணம் நடந்ததற்கு மேல் இப் பொழுது பாலநரூபமான நிர்வஹணத்தைச் சொல்லுவது மன்றியில், நிர்வஹண ஸித்தியென்று சொல்வது போல் பலபர்யந்தமான நிர்வஹணத்தையும் ஸூசிக் கலாம். ப்ரஜைகளின் உல்லாஸ பல்லவித பாலநாதிகளால் இந்தச் செடிகளை வளர்க்கும் தாய்க்கும் கோரகிதத்வம் உண்டாகிறது.

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

(ஸ்ரீ. உப. வித்வாந் ஏ. வி. கோபாலசார்ய ஸ்வாமி, திருச்சி.)

(ஸஞ்சிகை 3, பக்கம்—44 தொடர்ச்சி.)

இப்படிக் கல்யாணமாகப் பேசும் தன் ஸேநாபதியை ராஜா மெச்சுகிருர்.

சமம் தமம் முதலிய ஆந்தர குணங்கள் விவேகனுடைய மஹாராஜா மஹா மோஹனை ஜயிப்பதற்கு ஸேனைகளாய் அமைந்தன. அச்சேனைக்குத் தலைவன் வியவஸாயன். சம தமாதிகளும், தத்துவ ஞானமும் உதித்தவுடன் சற்று

நேரம் இருந்து மாறிப் போகக்கூடாது. அவையெல்லாம் வியவஸாயத்தால் தான் த்ருடங்களாயிருக்கும். சம தமாதி குணங்கள் வித்யை வந்த பிறகு கடைசீ வரையில் த்ருடமாக அநுவர்த்திக்கவேண்டு மாகையால் வியவஸாயனே இந்த ஸைங்யத்துக்குத் தலைவன் ஆக ஏற்படுத்தப்பட்டான். ஈசுவரனுக்கு அவன் திருவுள்ளத்தை யொத்து நடத்தும் ஸேனைமுதலியாரைப்போல் விவேக மஹாராஜாவுக்கு அவனோடொத்து வேறுபடாத ஒரே நிலையான புத்தி நிச்சயத்தையுடைய வியவஸாயன் உத்தமனான ஸேநாபதியாகிறான்.

சம தமாதிகளைவிட ஐகாந்தய வ்யவஸாயம் ப்ரதானமென்று கருத்து. சம தமாதிகளில் வ்யவஸாயமென்கிற த்ருடாப்யாஸம் வேண்டும். இப்படி மஹாராஜா சிலாகித்ததும், அச் சேநாபதி தான் பேரரசர்களது கையில் சஸ்த்ராதிகளைப்போல் விவேகனுடைய பலத்தினாலேயே ஜயிக்கிறவன் என்றும், தனக்கோர் விதத்திலும் ஸ்வாதந்த்ரயம் இல்லையென்றும் தான் அவருக்கு அத்யந்தம் பரதந்த்ரனென்றுஞ் சொல்லி, ஆகையால் ஸ்வாமி! ஜயத்தின் பெருமை எல்லாம் உம்முடையதேயாகும் என்றும் சொல்லுகிறான்.

'ப்ரஹரணந்யாயத்தை அநுஸரித்து' என்று இங்கே கூறப்பட்டது. அதன் ஸ்வாரஸ்யம் ராமபாணத்தின் ஜயம் ராமனுடைய ஜயமாகும். பாணம் அசேதநமாயிருந்தாலும் அதைப் பிரயோகிப்பவனுடைய வலிமையால் அன்றோ அதற்கு வலிமை. ஸ்வாமி! உமக்கு நான் சஸ்த்ரம்போல் ஆகின்றேன். நீர் என்னை மோஹாதி சத்துருக்கள் பேரில் எறிந்து அதனாலுறும் ஜயப்பெருமை நுந்தமதே யாகின்றது என்றானாயிற்று. மேலும், இந்தப் ப்ரஹரணந்யாயத்தையே ஸ்ரீ ஹநுமான் ஸமுத்ரத்தைத் தாண்டு முன்பு அநுஸந்தித்தார். ஸ்ரீ ராகவனுடைய ஹஸ்தத்திலிருந்து வெளிக் கிளம்பின ச்வஸந விக்கிரமமுள்ள சரமானது எப்படி அந்தப் பகவானுடைய பலத்தாலும் வீர்யத்தாலும் தேஜஸ்ஸாலும் சக்தியாலும் பாயுமோ அப்படியே நானும் அத்யந்த பரதந்த்ரனாகி அசேதநதுல்யமாக ராமபாணவேகவானாய் வீர்யத்தோடு ராவணன் அரசாட்சி புரியும் இலங்கைமா நகரிற் சென்று ஸ்ரீ ஸீதையைத் தேடி வருவேன் என்று நிர்மமராய் ஸாத்விக ஸங்கல்பஞ் செய்தாரென்று ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகி யருளிச் செய்தார். ராமபாணத்தைத் திருஷ்டாந்தமாக் வெடுத்தது. 'பாணம்போல் வேகமாய் ஓடுகிறான் ஸூர்யன்' என்பதுபோல வேகத்துக்கு மட்டுமல்ல, தான் அசேதநத்தைப் போல் ஸ்வயம் யாதொரு யோக்யதை யில்லாமல் தன்னைப் பிரேஷணஞ் செய்யும் பகவானுடைய பலமும் வேகமே தன்னுடைய பலமும் வேகமும் என்று த்ருடமான அத்யவஸாயத்தைக் காட்டுமதில் திருஷ்டாந்தத்தின் முக்கிய நோக்கு. இந்த வபிப்ராயத்தைக் காளிதாஸன் ரகுவம்சத்தில், 'மாருதி ஸாகரத்தை நிர்மமராகத் தாண்டினார்' என்கிற வார்த்தையால் ஸூசிப்பித்தான். இங்கே ப்ரஹரண நியாயமென்றது மாருதி வசநத்தை யாதாரமாகக் கொண்டது. இதையே 'மாருதி' நியாயமென்று ஸ்வாமி ஸ்ரீதேசிகன் யாதவாப்யுதயத்தில் நிர்த்தேசிக்கிறார். கம்சவதத்திற்குப் பின்னர் பத்தாவது ஸர்கத்தில் வஸுதேவர் கண்ணனை ஸ்தோத்திரஞ் செய்யுமிடத்து.

104

“ஸஹஸா த்வத்பதேநைவ ஶாகாம்ருகந்யாயஶாலிதா:”
நிஸ்தரந்தி அதஸ்தோகா: நிஸ்தரம் பவஸாகரம் ॥”

‘தாண்டக் கூடாத ஸம்ஸார ஸாகரத்தை அங்குளீயகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்த பலத்தால் மாருதி ஸாகர லங்கனஞ் செய்தது போல் உம்முடைய திருவடிகளைக் கையால் பிடித்துக்கொண்டு இலகுவாய் அதி சீக்கிரமாய்த் தாண்டுகிறார்கள் உன் அடியார்கள்’ எ-று. இலங்கைக்குப் போகையில் வீரன் மோதிரம் இருந்தது. திரும்பி வருகையில் ஸமுத்திரந் தாண்ட ஸ்ரீ ஸீதையின் சூடாமணி பல மிருந்தது. ஜநகமஹா ராஜருடைய புத்திரியால் தரிக்கப் பட்ட மஹார்க்கமான சூடாமணி யென்ற உயர்ந்த ரத்தினத்தை வாங்கிக் கொண்டு அதன் பிரபாவத்தால் ஒரு மலையானது பெருங்காற்றினால் தள்ளுண்டு வெகு தூரத்தில் எறியப்படுவது போல் தான் திரும்பி ஸாகரத்தைத் தாண்டிப் போய் ஸுகமாய்த் தன்னிடஞ் சேரலாமென்று மனத்துக்குள் ஸந்தோஷப்பட்டு ஸ்ரீ ஹநுமான் தைரியங்கொண்டார் என்றும் 3-ஆவது ஸர்க்க முடிவில் மஹாகவியும் கூறியருளினார். இம்மாதிரியான பாரதந்திரிய நிச்சயத்தை இன்னமொரு திருஷ்டாந்தத்தால் வியவஸாயன் எடுத்துக் காட்டுகிறான். “நான் உம்முடைய நிழலாவேன். என்னுடைய ஸத்தை ஸ்திதி பிரவிருத்தி என்ற இவையெல்லாம் உம்மதீனமே. நீர்ஸஅவாயத்தஸித்தியானவர் அல்லீர்; என்னைப் போன்ற ஸகலவர்களுடைய ஸித்தி உம்மதீனம். நீர் ஸ்வாயத்த சித்தியுடைய பேரரசர் ஆகின்றீர்,” என்று. அதுவன்றியும், ஸ்ரீ ராமயணத்தில் ஜீவேச்வரர்களுடைய ஸம்பந்த முதலியவற்றை விளக்கவேண்டி எடுத்துக் காட்டின ஜலமத்ஸ்யந்யாய திருஷ்டாந்தம் போலவே ஸ்ரீஸ்வாமியும் இங்கு அத்யந்த பாரதந்த்ர்யத்தை எடுத்துக் காட்டவேண்டி அதை வியவஸாயன் முகமாய் விவேகனை விட்டுப் பிரிந்தால் இளையபெருமாளைப் போன்று தாஸ்யத்தையடைந்த தாலும் ஸீதையைப் போல் பத்நியான ஸுமதியும் ஜலத்திலிருந்து வெளியெடுக்கப்பட்ட மத்ஸ்யம் போன்று ஒரு முஹூர்த்தகாலங் கூட ஜீவிக்கமாட்டோம். என்று கருத்து கொண்ட ‘த்வஸாஹபவாஸஸதிவஷா ஜநௌகூரதஸஷ்ந்யாயெந ஹவஷம் விநாஸஹூர்த்தஷஸவிநஜீவாவ:” என்று காண்பித்தது வெகு அழகு. இதை யொட்டியே கம்பனும் காண்பித்தது காவ்யரஸாஸ்வாத ரஸிகர்க்கு ரஞ்ஜகமாயிருக்கிறது. ‘தேநேயம்ஸ அயஷாத்தாஸஹூர்த்த தஷஸவிஜீவதி’ என்கிற ஸ்லோகத்தில் ஸஹூர்த்தஷஸவிஜீவதி என்று சேர்த்து அந்வயிக்கவேண்டியிருப்பதை அநுஸரித்து ‘ஸஹூர்த்தஷஸவிநஜீவாவ:’ என்கிற நிமிஷத்திலும் சேர்த்து அந்வயிப்பது கவி ஹ்ருதயத்திற்கு விரோதமாகாது. ‘நகௌரயொந அஸ்ஸாயஷழ’ என்கிற ஸ்லோகத்தில் ‘ஸவஷி’ என்ற பஹுவசனமும் பன்மை ‘நேஸம்விஸிஜொநஹவொ’ என்கிற ஸ்லோகத்தில் ‘ஜெஹிரெ’ என்கிற பன்மையும் ப்ரயோகிப்பது போல “ஜீவாவ:” என்கிற த்விவசநத்திற்கு ஆர்ஷசைலியால் உபபத்தி ஸுலபம்.

பின்னர் வாதயுத்தம் நடக்க வேண்டிய யுத்த பூமிக்கு நெருங்கிப் போகிறார்கள்,—வேதாந்த ஸித்தாந்தம் உடையவர் வேடத்தையும்

வாதமென்பது ஸ்ரீதேசிகன் வேடத்தையுங் கொண்டு பிரவேசிக்கப்போகிறார்கள். இந்த சமயத்தில், விவேக மஹாராஜன் இன்னுஞ்சில திருஷ்டாந்த நியாயங்களை உதாஹரிக்கிறார்கள்:—வேதாந்த ஸித்தாந்தம் என்கிற ஸூர்யன் ஸித்தமாக விருக்கையால் அதற்கு விரோதமான தமோமய ஸித்தாந்தங்கள் எப்படி இப்பூவுலகில் பரவக்கூடுமென்று அஸம்பாவனை தோன்ற, ஸ்ரீதேசிகன் சாதிக்கிறார். ஸூர்யன் என்னும்தேஜஸ் பூர்வம் ஸித்தமாயிருப்பினும் எவ்வாறு இருள்நிபிடமாய் ஜகத்தில் பரவி, பின்னர் அது ஸூர்யனால் ஒழிக்கப் படுகிறதோ அவ்வாறே பரமதங்களும் எங்கும் பரவி இந்த வேதாந்த ஸூர்யனால் ஒழிக்கப்படுகின்றன. மேலும் ஸ்ரீபாஷ்யகாரரை த்ரய்யந்த ஸூர்யன் என்றும் வர்ணிக்க ப்போகிறார். வேதாந்தத்தை பாதிக்கமுயன்ற ஸமயங்கள் அதீத ஸமயங்களாய் வேதாந்தத்தால் பாதிக்கப் படுகின்றன. பாதமென்பதைக் காலாத்யயாபதேசம் என்று வியவஹரிப்பர். முன்பு அஞ்ஞானத்தால் சரியான ப்ரமிதி யென்று தோன்றிய ப்ராந்தி ஞானம், விமர்ச ரூப சோதநதசையில் காலஞ் சென்று .பிராமாண்யத்தை யிழந்து பாதிக்கப்படும். அதீதஸமயமென்பது காலாதீத மென்னும் பாதத்தைக் காட்டுகிறது. வித்வானுக்கும் மூர்க்கனுக்குமுள்ள தாரதம்யத்தை வாசஸ்பதி வநஸ்பதி தாரதம்ய மென்று சொல்லுவர். வாசஸ்பதி போன்ற வித்வான் முன்னிலையில் அஸமீசீந ஸமயவித்வான்கள் வநஸ்பதியைப் போல, அஃது ஆவது. ஸ்தாவரமான விருக்ஷம் போல் மூடர் ஆவார் என்றபடி. இங்கே புறச்சமய வித்வான்கள் வாசஸ்பதியைக் கூட வநஸ்பதியாக்கத் தங்களுக்குள்ள வாக்வச்யத்வ ஸாமர்த்தியத்தால் விசித்திரஸப்த ஜாலங்களால் பிரயத்தினஞ் செய்கிறார்கள். சமுத்திரத்தின் கோஷம் போல இவர்கள் கோஷம் இராநின்றது. இவர்கள் வைதண்டிகவேதண்டராகிறார்கள். வேதண்டம் என்பது யானை. ஓர் சிறிய காற்றினாலும் அலையக் கூடிய வாழை வனம் போன்ற சிரத்தையை வீண் வாதஞ்செய்து போர்புரியு மிவர்கள் அழிப்பார்—ஷி வேதண்டம் என்று யானையைக் குறிக்கும் சப்தத்திற்கும் வைதண்டிக சப்தத்திற்கும் உள்ள ஸப்த ஸாத்ருஸ்யத்தைக் காண்பிப்பதில் இங்குநோக்கு. அழிக்கும் விஷயத்தில் இந்த யானைகளைக்குத் தங்காடு பிறர் காடுஎன்று பேதமில்லை. இவ்யானைகளை ஜயிக்க ஆரண்யகமான வேதாந்த வனங்களில் விளங்கும் வாதமென்கிற ஸிம்ஹம் வருகிறது. இந்த வாதஸிம்ஹத்துக்குத் தர்க்காங்க பஞ்சகம் என்கிற ஐங்கங்களுண்டு. இப்படி ஸிம்ஹப்ரஸ்தாவம் வருகையில் வேதாந்தாரண்யங்களில் விளையாடும் ஸிம்ஹங்கள் பிரவேசிக்கிறார்கள். ஸித்தாந்தம் உடையவராகவும் வாதம் தேசிகனுமாகப்பிர வேசிக்கிறார்கள்.

தாத்பர்ய சந்திரிகையின் முதலில் ஏகலவ்யன் த்ரோணாசார்யரைத்யான மாத்ரத்தால் குருவாக அடைந்து ஸித்தி பெற்றபடி, கீதாசாஸ்திரத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் நேரில் ஆளவந்தாரிடம் சிரவணம் செய்யாவிட்டாலும், அவருடைய கீதார்த்தஸங்கிரகத்தை அநேக விருத்திகள் அநுஸந்தானம் செய்ததாலும், ஆளவந்தாருடைய திருவடித் தாமரைகளை நிரந்தரம் தியானம் செய்ததாலும்,

ஸ்ரீ பாஷ்யகாரருக்கு, ஆளவந்தாரிடம் கேட்டது போல் ஆளவந்தாருடைய ஹ்ருதயம் முழுவதும் விசதமாயிற்றென்று சாதித்திருக்கிறார். இங்கே தர்சன ப்ரவர்த்தகரான உடையவருடைய ஸாக்ஷாத் சிஷ்யனாக விருக்கையை மனோரதித்து, அவர் திருவடிகளுடைய நிரந்தர த்யானத்தால் அவர் தமக்கு நேரில் சேவைஸாதித்து, அபூர்வ விஷயங்களில் தமக்குள்ள ஸம்சயங்களைப் போக்குகிறதாக, தேசிகன் அநுஸந்திக்கிறார். உடையவர் ப்ரவேசித்ததும், வேதாந்தங்களுக்கு ஆதாரஸ்தம்பமும் த்வஜஸ்தம்பமுமான ஸித்தாந்தத்தை, ஸ்தூணாநிகநந்யாயத்தை யநுசரித்து, தமது சிஷ்ய பரம்பரையில் உதித்த தேசிகன், ஒருவராலும் அசைக்க முடியாமல், ஸ்திரப்படுத்துவதாக சந்தோஷிக்கிறார். இராமாநுஜனாகிய உடையவர் இளைய பெருமாளின் அம்சம், இராமனுக்கு அவர் தாஸ்யம் அடைந்தவர்; தேசிகன் இராமனுக்கும் இராமாநுஜனுக்கும் தாஸ்யமடைந்தவர். இவரை ஹநுமாருக்கு ஒப்பிடுவது அழகு; ஹநுமார் லக்ஷ்மணருக்கும், இராமருக்கும் தாஸர். இராமாயண கதையிலுள்ள ஹநுமாருக்கு தேசிகனை ஒப்பிடவே, அதற்கும் பிராசீன மான வ்ருத்தாந்தத்திலுள்ள தத்தாத்ரேயருக்கு ஒப்பாக உடையவரை தேசிகன் வர்ணிக்கிறார்.

ஸந்யாஸாச்ரமத்தை விஷ்ணுலிங்கம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. முதல் ஸன்யாஸி விஷ்ணு. ஸந்யாஸிகள், ஆதியிலும், அந்தத்திலும், மத்யத்திலும், வியவஹாரங்களில் நாராயண ஸ்மரணமும், நாராயண கீர்த்தனமும் செய்ய வேண்டியது ப்ரஸித்தம்; எல்லா ஸந்யாஸிகளாலும் அப்படியே அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. முதல் ஸந்யாசியான விஷ்ணு தத்தாத்ரேயராகவவதரித்து, த்ரிதண்டியாகயிருந்து, காணாதர் என்கிற வைசேஷிகர்களாலும், சாக்கியர்கள் என்ற பவுத்தர்களாலும் பாஷண்டர்களாலும் லோபத்தை அடைவிக்கப் பட்டவைகளும் த்ரயீ என்கிற வேதத்திலுரைக்கப்பட்டவைகளுமான தர்மங்களை உத்தாரணம் செய்ததாக மஹரிஷி வசனம். ஆதிஸன்யாஸியாகிய பகவான் த்ரிதண்ட தாரியாக விருந்ததால், த்ரிதண்ட தாரணம் அநாதிஸம்ப்ரதாயமாகும். தர்ம புத்திரரும் அர்ஜுநனும் ஸந்யாஸி வேஷம் போட்டுக் கொள்ளும் போது த்ரிதண்டிகளாக விருந்தார்கள். அவர்கள் அரசர்களான படியால், அரண்மனைக்கு பிக்ஷைக்கு வரும் குடீசகர், பஹூதகர் முதலியவர்களையே அவர்கள் பார்த்ததாலும், இச்சன்யாஸிகள் த்ரிதண்டதாரிகளாதலாலும் ஏகதண்டிகளாகிய பரமஹம்சர் அரண்மனைக்கு பிக்ஷைக்கு வராதவர்களாகையாலும் அப்பரமஹம்ஸர்களை இவர்கள் பார்த்திராததாலும், த்ரிதண்டதாரணம் செய்தார்கள்; ஆனால் ஏகதண்ட தாரணம் தான் பரமஹம்ஸ ஸன்யாஸிகளின் அநுஷ்டான மென்று தீக்ஷிதர், பரிமளத்தில் கக்ஷி சொல்லுகிறார். தத்தாத்ரேயரின் அநுஷ்டானத்திற்கு ஒருவித அந்யதாஸித்தியும் சொல்லமுடியாதாகையால், அத்திருஷ்டாந்தத்தை இங்கு உபந்யஸிப்பது உசிதம்.

மூன்று தண்டங்களால் மூன்று விதமான எதிர் மதங்களை சமனம் செய்தாரென்று இங்கு ஸூசிக்கப்படுகிறது. தத்தாத்ரேயர் அநஸூயையிடம் பிறந்தவர். அஸுரர்களை நிரஸனம் செய்வதற்காக விஷ்ணு அவதரிப்

பது பிரசித்தம் ஆஸுரஸ்வபாவத் தையும், ஆஸுரபுத்திகளையும் நிராகரிப்ப தற்காக தத்தா த்ரேய ரூபியான விஷ்ணுவின் சிந்நங்களை தரித்து யதீச்வரராகிய இராமாநுஜர் அவதரித்தார்.

த்ருதராஷ்ட்ரருக்கு விதுரர் தாம் அத்யாத்ம சாஸ்த்ரோபதேசம் செய்ய அதிகாரமில்லை யென்று, அவருக்குபதேசம் செய்யத் தமது த்யானபலத்தால் ஸநத்ஸுஜாதரை எழுந்தருளப்பண்ணினர்; தேசிகன் தமது த்யான பலத் தால் உடையவரைத் தமது முன்பே எழுந்தருளச் செய்வித்து, அவருக்கு ஸாஷ்டாங்கமாக ப்ரணாமம் செய்து ஜநகர் யாஞ்யவல்கியரிடத்தில் ஸூக்ஷ்ம மான கேள்விகளைக் கேட்டு, உபதேசம் பெற்று, ஸம்சயங்கள் தெளிந்து கொண் டது போல, தாமும் கேள்விகளைக் கேட்டு, ஸந்தேகத்தை நிவ்ருத்தி செய்து கொள்ளுகிறார். யதிராஜஸப்ததியிலுள்ள சிலச்லோகங்கள் இந்த நாடகத்திலும் உபயோகப் படுத்தப்படுகின்றன.

யஞ்ஞோபவீதத்தைத் தரித்தவர் என்று முதலில் கூறப்படுகிறது. ப்ராஹ் மணஸாமான்யத்துக்க சாதாரணமானயஞ்ஞோபவீதம் மற்ற ஸந்நியாசிகளிடத் தில் ம்ருக்யமாய் விட்டதே என்று சோகஸூசனம். 'மதுப்பி'ன், அர்த்தத்தை யுடைய இனிப்ரத்யயம் இங்கே ஸ்வரஸம். உபவீதத்தை ஒருக்காலும் விடுவ தில்லை. திருமார்பில் மின்னும் பூணூலை சேவித்துக் கொண்டு, திருமுக மண்ட லத்தில் பிரகாசிக்கும் ஊர்த்வபுண்ட்ரத்தை ஸேவிக்கிறார் 'அந்த நாடியாலே ஊர்த்வமாகக் கிளம்பிச் சென்று அம்ருதத்வ மென்கிற மோக்ஷத்தையடைகி றான்' என்று கடவல்லியில் கூறப்பட்டதை யநுஸரித்து, ஸ்ரீ சங்கராசாரியரும், ப்ரஹ்மரந்த்ரபாகத்திலிருந்து ஆத்மஜ்யோதிஸானது மேலே கிளம்புவதைக் காட் டும் அடையாளம் ஊர்த்வ புண்ட்ர மென்று காட்டியிருக்கிறார். அவர்ஊர்த்வ புண்ட்ரதாரியா யிருந்தாலும் உபவீதி யல்ல, 'உபவீதி'என்கிற விசேஷணத்தால், அந்த ஸம்ப்ரதாயஸ்தர்களான யதிகளின் வ்யாவ்ருத்தி. ஸ்ரீ சங்கராசார்யரு டைய புண்ட்ரத்தில் ஸம்சயம் சொன்னால், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவரும் உபவீதம் இல்லாதவருமான ஸ்ரீ மன்மத்வ ஸம்ப்ரதாய யதிகளின் வ்யாவ் ருத் தியைக் கொள்ளலாம்.

ஸந்யாஸாச்ரமத்தை மோக்ஷாச்ரமமென்பர்; ப்ரயோஜனாந்தரங்களை அபேக்ஷிப்பவர் ஒருக்கால் புண்ட்ராந்தரங்களை தரித்தாலும் மோக்ஷாச்ரமிகள் இந்த ஊர்த்வபுண்ட் ரதாரணம் செய்வதே உசித மென்று அபிப்ராயம். மூவு லகும் செய்த தவத்தின் பயன் அவரவதாரம். மஹா தபசினால் இராமன், கிடைத்தார் என்பது போல் இந்த இராமாநுஜனும் கிடைத்தார். திருமுகமண் டலத்தை ஸேவித்துக் கொண்டு ஞானமுத்ரையுடன் உபதேசம் செய்யும் திருக்கையை ஸேவிக்கிறார். இவருபதேச மல்லவோத்ரி ஜகத்புண்ய பலமாயிற்று. திருக்கையில் முக்கோலைக்கண்டு களிக்கிறார். ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் ஸந் யாஸிகளை த்ரிதண்டிகளென்று பலகாற் கூறுகின்றனவே யென்று கேட்டால் வாக்தண்டம், கர்மதண்டம், மனோதண்டம், என்கிற இம்மூன்றும் யாரு

டைய புத்தியில் நியதமாயிருக்குமோ, அவர் த்ரிதண்டியென்று சொல்லப்படுகிறார் என்று மனு கூறியிருக்கிறபடியால், அந்த மூன்று தண்டங்களையுடையவராக பரமஹம்ஸர் வர்ணிக்கப்படுகிறார்களே யொழிய, கையில் முக்கோல் தரித்தவர் அல்லவென்று கூறுகிறார்கள். வாக்தண்டம் மௌனவிரத மென்றும், ஆசையில்லாமை கர்மதண்டமென்றும், ப்ராணாயாமம் மனோதண்டமென்றும் மனுவசனத்திற்கு தக்ஷர் வ்யாக்யானம் செய்தார்; த்ரிதண்டமுடைய வரென்று மட்டும் சொன்னால், அந்த த்ரிதண்டங்களை மட்டும் சொல்லுமோவென்று சங்கித்து கையிலும் முக்கோல் தரித்தவரென்று த்ரிதண்டஹஸ்தம் என்று வர்ணிக்கிறார்.

சரணாகதக் கூட்டங்களை மோக்ஷத்திற்கு நயனம் செய்ய பரமபதத்திலிருந்து அவதரித்தவர் இவர். கூட்டம் கூட்டமாக தம்மை சரணமடைந்தவர்களான அயோத்தியாவாஸிக ளெல்லாரையும் நற்பாலுக்குய்த்தனன், இராமன் என்பது ப்ரஸித்தம். இந்த இராமாநுஜரும் அப்படியே கூட்டம் கூட்டமாக சரணாகதர்களை நற்பாலுக்குய்ப்பவர்.

நிகண்டுவின்படி 'ஸார்த்தவாஹனெ'ன்பது 'போதவணிக்கைச்சொல்லும். உடையவருக்குக் கப்பல் வ்யாபாரி ஸாத்ருச்யம் உண்டு. ஸம்ஸார ஸமுத்திரத்தின் அக்கரைக்கு பக்திப்ரபத்திகளாகிற ஓடங்களால் முமுக்ஷுக்களை சேர்ப்பிப்பவர் பரம பதத்திலுள்ள ப்ரஹ்மாநுபவச்சரக்கை இங்கே கொண்டு வந்து, ஹரிபக்த தாஸ்யரஸத்தை இங்குள்ள வருக்குக் கொடுத்து, அவர்களை க்ரயம் வாங்கி விண்ணகர் சேர்ப்பர். க்ரயவிக்ர யார்ஹமான சேஷத்வமே இவருபதேசமானதால், இவரை வ்யாபாரி என்று சொல்லத்தட்டில்லை. இவர் கொள்ளும் சரக்குகள் ஜீவரத்நங்கள்.

'பதிம்யதீநாம் ஈடே' என்று பரோக்ஷநிர்தேசம் யதிராஜ சப்ததியில்; 'ஹரிமீடே' என்று ப்ரதிச்லோகத்தின் முடிவிலும் சொல்லி, பகவான் விஷயமாக ஸ்ரீ சங்கராசாரியர் ஒரு ஸ்தோத்திரம் செய்தார். அம்மாதிரி இராமாநுஜன் விஷயத்தில், 'ஈடே' என்று இவர் ஈடுபடுகிறார். இங்கு உடையவர் ஸந்நிஹிதராய் எழுந்தருளியிருப்பதால், 'உம்மை' என்று ப்ரத்யக்ஷ நிர்தேசம். ப்ரத்யக்ஷத்தில் குருக்களைக் கொண்டாட வேண்டும்.

யஞ்ஞோபவீத மென்ற ப்ரஹ்மஸூத்ர முள்ள ஸந்யாஸிகளிடம், ப்ரஹ்மஸூத்ரச்ரவணம் பண்ணும் படியான பாக்கியம் கிடைத்ததே யென்று முதலில் ஸந்தோஷித்தார். இங்கே உத்தமாங்கமான சிரஸை ஸேவித்துக் கொண்டு, அதற்கு அலங்காரமாய் விளங்கும் சிகையைக் கண்டு மகிழ்ந்து, ச்லோகத்தை நிகமனம் செய்கிறார். 'மின்னு நூல்விட்டு சித்தன்' என்பதைப்போலிந்த வைதிக சிந்நங்கள் போக்கியமாகும். சிகையுடன் வபனம் செய்து கொண்டு, பஹிஸ்ஸூத்ரத்யாகம் செய்ய வேண்டு மென்ற அதர்வணச்ருதியை உதாஹரித்து சிகையையும் ஸூத்ரத்தையும் விட வேண்டு மென்று சிலர்

கூறுகிறார்கள். இவ்விரண்டையும் விடுவது உசிதமல்லவென்று காட்ட ச்லோகத்தின் ஆரம்பத்தில் ஒன்றையும் முடிவில் மற்றொன்றையும் தேசிகன் வைத்திருக்கிறார். நெய்யுடன் அன்னத்தை புஜிக்க வேண்டுமென்றால் நெய்யும் புஜிக்கப்பட்டு போஜனக்ரியையாகிய பயனிலைக்கு நெய்யும் செயப்படு பொருளாவது போல் சிகையுடன் க்ஷௌரம் கொள்ள வேண்டுமென்ற வசனத்திற்கு சிகையும் க்ஷுவரத்தால் நீக்கப்பட வேண்டுமென்று பிறரபிப்பிராயம். உத்தரீயத்துடன் அன்னத்தை புஜிக்க வேண்டுமென்றால் உத்தரீயம் சாப்பாடாகிற பயனிலைக்கு செயப்படு பொருளாகாமல், கர்த்தாவான புஜிப்பவனுக்கு விசேஷணமாவதுபோல், இங்கே சிகை வபனகர்மமாகாமல், வபனம் செய்து கொள்ளும் கர்த்தாவுக்கு விசேஷணமாகிறபடியால், உத்தரீயம் உண்ணப்படாமல் நிற்பதுபோல, சிகையும் க்ஷௌரம் செய்யப்படாமல் நிற்கவேண்டுமென்று நமது அபிப்ராயம். ஸூத்ரத்தை வெளியே தள்ளுவதென்கிற த்யாகத்தை பிறர் சொல்லுகிறார்கள். பஹிஸ்ஸூத்ரம் என்பதை அவ்யயீபாவஸமாஸமாக ஒரே பதமாகக் கொண்டு ஸூத்ரம் தவிர மற்றதை யெல்லாம் த்யாகம் செய்ய வேண்டுமென்று நாம் அர்த்தம் சொல்லுகிறோம்.

இப்படிக் கொத்த அத்விதீயமான தனியனைச் செவியுற்ற வாசிரியர் சிஷ்யரைக்குளிரக் கடாக்ஷித்து ஆசீர்வதிக்கிறார்.

'ஆயுஷ்மன்' என்று அநுக்ரஹம் செய்து இவருடைய ஆயுஸ் எப்படி ப்ரசஸ்தமாய் உபயோகப்படும் என்பதைக் காட்டுகிறார். 'ஶேஷாயுஷா' என்று தம்முடைய ஆயுஷ்காலத்தைக் கழித்தவழி இவராலேயே கூறப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும். பிறமதங்களைக் கண்டிப்பது, அவைகளில் தோஷபுத்தியால்லல; வேதாந்த மதத்தை ப்ரதிஷ்டாபநம் செய்வதற்கு அங்கமாகவே அதில் ப்ரவ்ருத்திப்பது. 'ஹரிகுணஸரணீ ஹாஜநம்' என்று ப்ரஹ்மாநுபவ பரீவாஹங்களை அடைவது சொல்லப்பட்டது. இதையே 'சுவிஶ்ராந்தஶ்ருதகுஹகவ்யூஹவிஷயா:' என்கிற அடுத்த ச்லோகத்தில் ஆசீர் வதிக்கிறார். உம்முடைய மனசில் எப்போதும் ஓயாமல் ப்ரஹ்மாநுபவங்களின் பல ப்ரகாரங்களில் அது வேண்டும் இது வேண்டுமென்று மேலும் மேலும் மனோரதங்கள் கலகம்செய்து கொண்டு அலைந்துக்கொண்டிருக்க வேண்டுமென்று, முனிஸார்வபௌமர்களான ஆழ்வார்களின் அநுபவத்தை இங்கே அநுக்ரஹிப்பது. இப்போது ப்ரஸ்துதமான எதிர்மதஸ்தர்களுடன் வாத கலகத்தில் ஜயத்திற்கு இது எப்படி உபயோகமாகுமென்றால், அநுபவத்தில் பராங்குசர் பரகாலர், முதலிய ஆழ்வார்கள் தான் பரபக்ஷங்களை நிரஸிக்கவல்லர்.

'ப்ரதிஷ்டாபிதவேதாந்த:' என்று வேதாந்தத்தைவாதம் செய்து ப்ரதிஷ்டை செய்ய, 'ப்ரஜ்ஞாதாஹவபரிவாஹ வ்யூஹதேவ ப்ரதிஷ்டிதா' என்கிறபடி தனக்குள்ளே அநுபவபரிவாஹங்கள் பொங்கிக் கொண்டிருக்கும்படி தத்வ ஞானம் ப்ரதிஷ்டிதமாகவேண்டும். தத்வ ஸாக்ஷாத்காரமுடைய தத்வதர்சிகளே ஞானத்தை உபதேசம் செய்யத்தக்கவர் என்றார் பகவான். தன் மனஸில்

110

ப்ரஹ்மானந்தம் பொங்கிப் பொங்கி திருமேனி முழுவதும் மயிர்க்கால்கள் வழியாய் ப்ரவஹிக்கும் ஸ்வபாவத்தைக் கண்டே நாஸ்திகரான ப்ரதிவாதிகளும் இவருறுதிச் சொல்லைக் கேட்டு ஆஸ்திக்யத்திற்குத் திரும்புவார்கள். மனஸில் பொங்கி வழியும் அநுபவத்தையுடையவருடைய தர்சன வாதத்திற்கு பிறரை வசப்படுத்தும் மஹிமையுண்டு. பற்பல அநுபவங்களின் மனோரதங்களைப் பற்றி மனஸிலுள்ள ஓயாக் கலஹங்களை ஸுலபமாக சமனம் செய்யுமென்பதும் ஒரு வேடிக்கையான உண்மையே. ஆந்தர கலகம் பாஹ்ய கலகத்தை அடக்கும். இது 'ஸுவிஹ ... தம் உஹாதநா' என்று பகவானுடைய ஆவிர்பாவம் போன்றது.

அக்ரூரர் முதலிய பரம பாகவதர்களுக்கு இப்படி அநுபவ மனோரத கலகங்களை உண்டாக்கத் தான் பகவான் ஆவிர்பவிப்பது. முனிகள், சித்தர்கள், இவர்களுக்கு சுலபமான அநுபவம் என்று கூறியதும், 'தேனும் பாலும், கன்னலும் அமுதும் ஒத்தே' என்கிற அநுபவம் புத்திஸ்தமாக, மதுக்ஷீரந்யாயம் போலே என்கிறார்.' உடையவர் நேரில் எழுந்தருளியிருக்கும் பொழுது 'ஸம்ஶயாநு உதவிஷீதாநு' என்று பீஷ்மரிடம் சந்தேகங்களைக் கேட்பது போலும், அதிவிநயமாக ஸம்சயங்களை விஞ்ஞாபனம் செய்கிறார். 'ஸஜூமா வஸந்தஸ்' என்றும், 'உவஸந்நாய ஸஜூக ஸ்ராந்த வித்தாய' என்கிற ச்ருதிப்படி அந்வயம் செய்யவேண்டியதைக் காட்டுகிறார். பிற சமயிகளுடன் வாதம் செய்வதில் வீதராகமவைஷமான விவருக்கு ஸ்வத: ப்ரவ்ருத்தியில்லை. பெரியோர்கள் திருவுள்ளத்திற்கு உகந்ததென்று அவர்கள் உகப்பை அங்கிகரித்து இவர் பரபக்ஷப்ரதிக்ஷேபம் செய்வது. 'நவிமுஹஜுகயாராவி:' என்கிற மஹர்ஷி வசனத்தையநுஸரித்து, இங்கே விக்ரஹம் அதாவது கலஹம் செய்யும் வாதத்தில் ருசி கூடாதென்று மஹர்ஷிகள் ப்ரதிஷேதித்தனர் என்கிறார். 'ஸுஹயம ஸவஷஹவெதைஹெஹூ உத்த: ஷவாஹா' என்று ஸர்வ ப்ராணிகளுக்கும் அபய தக்ஷிணை கொடுத்து ஸந்யஸித்த பரஹம்ஸரான தமக்கு ப்ரதிபக்ஷிகளுடன் வாதப்போர் புரிவது யுக்தமல்லவென்று, விச்வாமித்ரர் இராமனைக் கொண்டு மஹா மாயாவிகளான மாரீசாதிகளை நிரஸநம் செய்ததுபோல் க்ருஹஸ்தரான விவரைக் கொண்டு ப்ரதிபக்ஷ ஜயம் செய்வதாக குரு கூறுகிறார். ப்ரதிபக்ஷ நிரஸநத்திற்காக ப்ரதிபக்ஷிகளுடன் யாவதாயுஷம் வாதங்கள் செய்ய அதிகாரம் இருப்பதற்காக ஸ்வாமி தேசிகன் ஸந்யஸிக்கவில்லை யென்று இதனால் நினைக்கலாம். யாஞ்யவல்க்யர் தாம் க்ருஹஸ்தரா யிருக்கும்பொழுது ஆச்வலாயனர் முதலியவருடன் வாதப் போர் செய்து ஜயித்ததாகவும், பிறகு ஜநகருடன் தத்வம் தெரிய வேண்டியதற்காக வாதம் செய்து, பிறகு ஸந்யாஸம் செய்து கொண்டாரென்றும், ஸந்யாஸிகளுக்கு வாதப்போரில் அதிகாரம் இல்லையென்றும் வித்யாரண்யஸ்வாமி கூறியிருக்கிறார்.

காசீ க்ஷேத்ரத்தில் வாதப்போர் நடக்கிறது. அங்கே தாரகம் என்ற ராம மந்த்ரத்திற்கு நிரதிசயமான ப்ரபாவம். ராம மந்த்ரத்தை ஈச்வரன்

அங்கே உபதேசம் செய்வார். புறச்சமயத்தாருடன் வாதம் செய்வதில் ஜல்ப விதண்டைகளையும் பரிக்ரஹிக்கலாமென்றும், அவை பலே அதிபலே என்கிற மந்த்ரங்களாகுமென்றும் குரு கூறுகிறார். கௌதம ந்யாய ஸூத்ரத்தில் 'நெல் பயிரின் வளர்தலை ஸம்ரக்ஷிக்க முள்ளும் கிளைகளுமாக வேலிபோடுவதுபோல் தத்வ நிச்சயத்தை ஸம்ரக்ஷிக்க ஜல்பவிதண்டைகளின் உபயோகம்' என்று கூறி யிருப்பதை இங்கே அநுஸரிக்கிறார். குருவை விச்வாசார்யர் என்று நிர்தேசிப் பது ஜகத்குரு என்கிற வ்யவஹாரத்தை ஒக்கும். குருவால் உபதேசிக்கப் பட்டதைத் தம்முடைய ஞானத்தால் ப்ரபலப்படுத்துவதால் ப்ரத்யுபதேசம் செய்வது போல ப்ரதிபையுடையவரென்றும், இவர் ஜயமடையாமலிரார் என் றும்; ஆசார்யர்களுக்கு இவரிடத்தில் மிகுந்த நம்பிக்கை யுண்டென்றும், ப்ரதி பக்ஷிகளும் 'ஸதேரா: வ வ்யாதவீய ஷஸ்ய ஸஞ்ஜநீயஸ்ய விக்ரமை:' இவ ரைத்தான் தங்களுடன் வாதப்போர் செய்ய ஆசைப்பட்டு ப்ரார்த்திக்கிறார்க ளென்றும், குரு இவரைக் கொண்டாடுகிறார்.

வாதம் செய்வதில் அவலம்பிக்க வேண்டிய ப்ரமாண முறைகளை விஸ் தரித்துக் கூறுகிறார். உடையவர் ஸாதித்த ஐந்தாறு க்ரந்தங்களிலுள்ள வழி களை யநுஸரித்து, அந்த மார்க்கத்திற்கு விரோதமில்லாமல் கேட்பவர் ஹ்ருத யத்தில் புகும்படியான யுக்திகளை யுபந்யஸிக்க வேண்டும். க்ரந்தங்களைக் குறிப் பிடுகையில் கீதா பாஷ்யத்தை பகவானுடைய வசனத்திற்கு பரிஷ்காரம் செய்வ தென்றார். தாத்பர்யசந்த்ரிகை யாரம்பத்தில் 'யாருடைய பாடல்களின் உப நிஷத்துகளுக்கு நெருங்கிய கருத்தை யதிபரிப்ருடரான ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரதர்ச னம் செய்தாரோ' என்று கண்ணனை வர்ணித்தார். சிஷ்யர் தாம் ஜாகரூகராக வாதம் செய்வதாகக் கூறுகையில் உத்தரராம சரித்திரத்தில் பவபூதி ஆத்ரேயி என்னும் வால்மீகி மஹர்ஷியின் சிஷ்யை கூறுவதாகச்சொன்ன ச்லோகத்திற்கு எதிர்த்தட்டாக ஒரு ச்லோகம் கூறுகிறார்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை வார்ஷிக மஹா ஸங்கம்

திருக்கண்டியூரில் நடந்த ஸபை விபரம்

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 20 வது வார்ஷிக மஹா ஸங்கம் இவ்வருஷம் சென்ற பங்குனி மீ 24, 25ந் தேதிகளில் (எப்ரல் 5, 6 ந்தேதிகள்) தஞ்சாவூருக்கடுத்த திருக்கண்டியூர் என்னும் திவ்ய தேசத்தில் ஸ்ரீசரண்யன் திருவுள்ளப்படி உஹக்க நடந்தேறிற்று. ஸமீப தேசங்களிலிருந்த பல

ஸ்வாமிகள் ஸபைக்கெழுந்தருளியிருந்தனர். பல பண்டித ரத்நங்களால் ஸித்தாந்த விஷயமாகப் பல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. வித்வான்களான வேதாந்தாசார்ய ஸ்வாமி (திருவையார் ஸமஸ்கிருத கலாசாலை அத்யக்ஷர்) புத்தங்கோட்டஹம், ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வெண்ணாத்தங்கரை ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, தில்லையம்பூர் சக்கிரவர்த்தியாசார்ய ஸ்வாமி, காரப்பங்காடு வெங்கடாசார்யஸ்வாமி, மீமாம்ஸாசிரோமணி திருமலை தி. தாதாசார்யஸ்வாமி, அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்யஸ்வாமி, நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, முதலிய பல வித்வாங்கள் எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீ உ. வே. வேதாந்தாசார்யஸ்வாமி இரண்டு திநங்களிலும் ஸபைக்கு அக்ராஸநம் வஹித்தார்.

முதல் தினத்தில் ஸபை ஆரம்பமாகு முன்னதாக அக்ராஸநாதிபதி ஸ்வாமி அங்கு ஸந்நிஹிதர்களாகவிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் வித்வாங்களாலும் பூர்ண கும்பம் வாத்யம் ஆகிய வற்றுடன் ஸபைக்கு அழைத்துவரப்பட்டார். ஸ்ரீ ஹரசாப ஹரன் ஸந்நிதி முன்மண்டபத்தில் ஸபை உபக்ரமமாயிற்று.

வித்வாங் ஸ்ரீ உப வெண்ணாத்தங்கரை ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி முதலில் ஸ்வாகத நிவேதநம் விண்ணப்பித்துக்கொண்டார். அந்த ஸ்வாமி ஒருமணி அவகாசம்போல் உபந்யஸிக்கையில் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தின் ரஹஸ்யங்களைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லி இப்பொழுது காலமிருக்கும் ஸ்திதியில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தினர் ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணத்தைக் குறித்து என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொன்னார். இப்பொழுது ஜனங்களுக்கு மதப்பற்றும் மதாநுஷ்டானமும் மிகவும் குறைந்து வருகிறதென்றும் ஸமூஹத்திலுள்ள அபிஜ்ஞர்கள் இவ்விதம் ஸித்தாந்தத்திற்கு லோபமேற்பட இடம் கொடுக்கக்கூடாதென்றும் லோக ஹிதத்தை யநுஸரித்தே இந்த மத ப்ரவிருத்தி அவச்யமாகிறதென்றும், சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையை எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அதிக ஊக்கத்துடன் ஆதரித்து அதன்மூலம் கிராமங்கள்தோறும் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்றும் அப்பொழுதுதான் ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் உஹக்கவும் ஆசார்யர்கள் பட்ட பரிச்ரமம் ஸபலமாகவும் ஹேதுவேற்படுமென்றும், இதற்காக ப்ரதி க்ராமமும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கிளை ஸபைகளை யேற்படுத்தி அதன் மூலம் அடிக்கடி மத உபந்யாஸங்களும் புராணப்ரவசநமும் நடந்துவருமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இதில் அங்கங்கே உள்ள ஜனங்கள் சிரத்தைகாட்டி இதற்காக திரவ்ய ஸஹாயஞ் செய்யவேண்டுவதும் அவச்யமென்றும் அந்தஸ்வாமி ப்ரார்த்தித்துக்கொண்டார் முடிவில் 10 வருஷங்களுக்குமுன் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம் திருக்கண்டியூரில் நடந்ததைப்பற்றி ஞாபகப்படுத்தி இரண்டாவது முறையாக இப்பொழுது ஸபை அங்கு கூடநேர்ந்தது அத்தேசவாஸி

களின் பாக்யமென்றும் ஸாதித்து ஸ்ரீ உ. வே. வேதாந்தாசார்ய ஸ்வாமி அக்ரா ஸநம்வஹிக்க வேண்டுமென்பதாகப் பிரார்த்தித்துக்கொண்டார்.

ஸ்ரீ உ. வே. வேதாந்தாசார்ய ஸ்வாமி அக்ராஸனம் வஹித்து இரண்டு மணி அவகாசம்போல் உபந்யஸித்தார். மநுஷ்யனுக்கு மதம் என்பது எவ்வளவு அவச்யமென்பதை பல வைதிகலௌகிக திருஷ்டாந்தங்களைக் கொண்டும் ஆதுநிக புத்திமான்களின் ஆராய்ச்சியைக் கொண்டும் அந்தஸ்வாமி விரிவாக எடுத்துச் சொன்னார். ஆத்மாவுக்கு ச்ரேயஸ் ஏற்படவேண்டுமானால் மதத்தில் விசுவாசமும் அதன் அநுஷ்டானத்தில் ஒரு சிரத்தையுமேற்படவேண்டுமென்பதாகச் சொன்னார். பிறகு இதர ஸித்தாந்தங்களைப்பற்றி ஸங்க்ரஹமாக எடுத்துச்சொல்லி அவற்றைக்காட்டிலும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்குள்ள ஏற்றத்தை விரிவாக எடுத்துச்சொன்னார். வைதிக மதங்களில் இந்த விசிஷ்டாத் வைதஸித்தாந்தமே ஸகலமான ச்ருதி புராணங்களுக்கொத்ததாக விருக்கிறதென்றும் இதுவே மற்ற மதங்களைவிட மனஸுக்கு அதிகத் தெளிவையும் சாந்தியையும் கொடுக்கிறதென்றும் சிதசித் ஈச்வர தத்துவங்களும் ஈச்வரனை அடைவதற்கான பக்தி ப்ரதிபத்தியாகிற உபாயங்களும் அவற்றின் பலமாகிற கைங்கர்ய ரூபமான மோக்ஷ ஸாம்ராஜ்யமும் இந்த ஸித்தாந்தத்தில் விசேஷித்து உபதேசிக்கப்பட்டிருக்கின்றன வென்றும் அந்தஸ்வாமி சொன்னார். இப்பொழுது ஸ்ரீ வைஷ்ணவர்களாக வுள்ளவர்கள் பூர்வாசார்ய ஸூக்திகளை அப்யஸித்து ஸம்ப்ரதாயஜ்ஞானத்தைப் பெருக்கிக்கொள்ள பரிச்ரமப்படவேண்டுமென்றும், இதில் ஆத்மார்த்தமான சிரத்தை யேற்படவேண்டுமென்றும், அப்படி யெல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் செய்வதானால் அவர்களுக்கு மாத்திரமல்லாது ஸகல ஜகத்துக்குமே அநுகூலமேற்படுமென்றும் அப்பொழுதுதான் ஸ்ரீராமநுஜ ஸித்தாந்தம் ஸர்வலோக ஹிதை ஷிணியென்று அநுஸந்திக்கப்படுவது ஸார்த்தகமாகுமென்று அந்தஸ்வாமி ஸாதித்தார். பிறகு ஸித்தாந்தஜ்ஞான மேற்படுவதுடன் ஆத்ம குண பரிபூர்த்தி ஒவ்வொருவருக்கு மேற்படவேண்டுமென்றும் இந்த ஆத்மகுண பரிபூர்த்தியில்லாத வெறும் ஜ்ஞானம் ஒன்றுக்கும் பயன்படாதென்றும் சொல்லி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள்ளாக விருக்கும் அவாந்தர ஸம்ப்ரதாய வைஷம்யங்களைப்பற்றி விஸ்தரேண அக்ராஸனர்ஸ்வாமி பிரஸ்தாபித்தார். இம்மாதிரியான கலாவைஷம்யங்களும் ஸம்ப்ரதாய வைஷம்யங்களும் சாஸ்திர ஸம்மதமாகவோ ஆச்சார்ய ஸம்மதமாகவோ ஆகாதென்றும் இப்பொழுது பல திவ்ய தேசங்களிலும் நடந்துவரும் கலகங்களைப்பார்த்தால் அவை கேவலம் காமக்ரோதாதிகளாலேயே ஏற்படுகின்றன வென்பதும் அவற்றினால் எந்த ஸம்ப்ரதாயத்திற்கும் வஸ்துத: எவ்வித லாபமுமில்லை யென்பதும் நிதானித்துப் பரிசீலனை செய்பவர்களுக்குத் தெரியவருமென்றும் ஆனால் பஹுஜனங்களுக்கு வீணாக இக்கார்யங்களினால் மிதமிஞ்சி சரீரச்ரமம் அர்த்தவ்யயம், ஸ்வரூபஹானி, பகவத்பாகவதாபசாரம் முதலிய வைகளேற்படுகின்றனவென்றும், இந்தக் கேட்டை எப்படியாவது ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்திலிருந்து போக்கடிக்க எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் மநப்பூர்ணமாக ப்ரயத்

கப்படவேண்டுமென்றும் இது ஸுலபமான கார்யமில்லையாணுலும், ஆஸ்திகாக்ரேஸர்களான வைதிகலௌகிக ப்ரமுகர்கள் இவ்விஷயத்தில் விசேஷபரிச்ரமத்தையெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் அந்த ஸ்வாமி கேட்டுக்கொண்டார். முடிவில் ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ஸபை நகரம் தோறும் கிராமம் தோறும் ஜனங்களுக்கு ஸம்ப்ரதாய ருசியை யுண்டுபண்ண ப்ரசார ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் இதில் நமது ஸமூஹத்தினரும் ஸகல விதமான ஸௌகர்யங்களை செய்து கொடுக்கவேண்டுமென்றும் இப்படிச் செய்வதனுல் ஸ்ரீ சரண்யன் திருவுள்ளமும் ஆசார்யர்கள் திருவுள்ளமும் உகக்க ஹேதுவாகுமென்றும் அக்ராஸநர்ஸ்வாமி உபந்யஸித்து முடித்தார்.

பிறகு ஸ்ரீ அஹோபிலம்டம் ஆஸ்தானவித்வானுன வித்வாந் ஸ்ரீ உப புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாசாசார்யஸ்வாமி பகவத்கீதை என்பது பற்றி விஸ்தாரமாக ஒரு உபந்யாஸம் செய்தார். பகவத்கிதை என்பது இப்பொழுது ஸகல ஜனங்களாலும் பொதுவாகக் கொண்டாடப்படுகிறதென்றும் இதர மதஸ்தர்கள் கூட கீதையை பஹுமாணிக்கின்றனரென்றும் இந்த கீதையில் முக்யமாக என்ன உபதேசிக்கப்பட்டிருக்கிறதென்பதைமாத்திரம் அவர்கள் நிதானிப்பதில்லை யென்றும், பகவத்கிதை ஆரம்பம் முதல் கடைசிவரையில் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு அத்யந்தம் அநுகுணமாக விருக்கிறதென்றும், கீதையின் ஸித்தாந்தம் ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் தான் என்று சொல்லலாமென்றும், தவிர வர்ணுச்ரமதர்மமென்பது பகவத்கீதையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது மாத்திரமல்லாமல் பலப்ரகரணங்களிலும் வர்ணுச்ரம நியமங்கள் அவச்வம் அநுஷ்டேயங்கள் என்பதாக விதிக்கப்பட்டிருப்பது தெரியவருமென்றும் யாஸ்தவத்தில் கீதையில் விசேஷமிருப்பதாகக் கவுரவிப்பவர்கள் அதன் உபதேசங்களில் விச்வஸித்து அதன்படி அநுஷ்டிப்பதே ச்ரேயஸ்கரமென்றும், அதனுல் ஐஹிகமான ச்ரேயஸ்ஸும் ஆத்ம ச்ரேயஸ்ஸும் நிச்சயம் ஏற்படுமென்பது ஆப்தர்களான ஆசார்யபுருஷர்களின் துணிபென்றும் அந்த ஸ்வாமி அழகாக கீதா ச்லோகங்களைக் கொண்டும் இதரவாக்யங்களைக் கொண்டும் நிரூபணஞ் செய்தார்.

பிறகு மீமாம்ஸாசிரோமணி வித்வாந் ஸ்ரீ உப. டி. டி. தாதாசார்யஸ்வாமி ஸ்ரீநிகமாந்ததேசிகனின் கவிதையும் தத்வ விசாரமும் என்ற விஷயமாக விஸ்தாரமாக உபந்யஸித்தார். காளிதாஸன், பாணன் முதலிய கவிகளுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும், கவித்வத்திலுள்ள தாரதம்யங்களை அந்த ஸ்வாமி எடுத்துக்காட்டிஸ்ரீ தேசிகனுடைய ஸூக்திகள் சிற்சில விடங்களில் அதிக ஸ்வாரஸ்யத்தையுண்டு பண்ணக்கூடியவையாக விருப்பதை ஸ்ரீதசிகன் ஸூக்திகளைக்கொண்டு ரஞ்சகமாக எடுத்துக்காட்டினுர். பிறகு தாத்பர்ய சந்த்ரிகைபோன்ற க்ரந்தங்களிலிருந்து ஸ்ரீ தேசிகனின் தத்வ விசாரத்தின் காம்பீர்யம் வெளியாவதை எடுத்துக்காட்டி ஸ்ரீ தேசிகன் அருளிசெய்துள்ள க்ரந்தங்கள் மூலம் சம்ப்ரதாயத்திற்குச் செய்துள்ள பரமோபகாரத்தையும் விரிவாக எடுத்து ஸாதித்தார். இத்துடன் முதல் தினம் ஸதஸ் முடிவடைந்தது.

ஸபை மறுநாள் காலமே 8-மணிக்கு திருக்கண்டியூர் சமீபமுள்ள ராயம் பேட்டையில் கூடிற்று. வித்வான் ஸ்ரீ உப. வேதாந்தாசார்ய ஸ்வாமி அக்ராஸனாதிபத்யம் வஹித்தார்.

வித்வாங்களான ஸ்ரீ. உப. இளநகர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, விலிவலம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீ. உப. வி. ஆர். ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி ஆகியவர்கள் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த தத்வங்களைப்பற்றி உபந்யாஸஞ் செய்தார்கள். பிறகு வித்வாந் காரப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமி 'அத்யவஸாயத்தின் தாரதம்யம், என்ற விஷயமாக ஸபாரஞ்சகமாக விஸ்தாரமான ஒரு உபந்யாஸஞ் செய்தார் அந்த ஸ்வாமி தமது உபந்யாஸத்தில் ஸீதாப்பிராட்டி, த்ரௌபதி, தமயந்தி, ஸாவித்ரி, ஏகபத்னி, ஆகியோர்களுடைய பாதி வருத்யத்தின் அழகையும் இவர்களுக்குள்ளாக அத்யவஸாயத்திலேற்பட்ட விசேஷ மாறுபாடுகளையும் விஸ்தாரமாக ஸாதித்தார். இத்துடன் காலமே ஸதஸ்முடிந்தது.

மத்யாஹ்நம் 3-மணிக்கு ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் வார்ஷிக நிர்வாஹக் கூட்டம் நடைபெற்றது. பிறகு க்ரமமாக ஸபை ஆரம்பமாயிற்று. கந்யைகள் விவாஹஸம்பந்தமான சட்டத்தை கண்டிப்பதான தீர்மானங்களை வித்வான் ஸ்ரீ உப அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசார்ய ஸ்வாமி பிரேரேபணை செய்தார்.

கந்யைகள் விவாஹ வயஸ்ஸை நிர்ணயித்துச் சட்டம் செய்யப்பட்டிருப்பதை ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்தினரடங்கிய இந்த ஸபைகண்டிப்பதாகவும் இச்சட்டம் சாஸ்த்ர விருத்தமாகவும் ஆசாரவிருத்தமாகவும் ஜனங்களுக்குக் கெடுதலையுண்டுபண்ணக் கூடியதாகவுமிருப்பதாலும் இச்சட்டம் நிறைவேறியிருந்தாலும் தர்மத்தை ரக்ஷிக்கவேண்டி முன்போலவே பிராஹ்மணர்கள் விவாஹங்களை நடத்திவரவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொள்வதாகவும் ஸ்ரீ உப கோபாலதேசிகாசார்ய ஸ்வாமி ப்ரேரித்து உபந்யஸிக்கையில் இச்சட்டத்தினால் ஹிந்து தர்மத்திற்கும் தர்மாசாரங்களுக்கும் மிகுந்தஹானியேற்படுவதாகவிருக்கிற தென்றும் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்தினர் எல்லோரும் போதிய வளவு தர்மானுஷ்டானத்தில் ச்ரத்தாளுக்களாக வில்லாதது ஒரு புறமிருக்க இப்பொழுது வர்ணாச்ரம தர்ம விரோதிகளான பாஹ்யர்களால் வர்ணாச்ரம தர்மமே அழிக்கப்படும் நிலைமைக்கு வந்து விட்டதென்றும் இந்த ஸமயத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களும் மற்ற ப்ராஹ்மணர்களும் ஆபத்துக்களை யுணர்ந்து தர்மரக்ஷணத்திற்கான வழிகளைத்தேடவேண்டுமென்றும் இதில்எவ்வளவுபிரயாஸை எடுத்துக்கொண்டாலும் அது அதிகமாக மாட்டாதென்றும் இப்பொழுது இந்த ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டதுடன் மாத்திரமல்லாது இனி இதைப் போன்ற பலவிதமான ஆபத்துக்களு மேற்படக்கூடுமென்றும் அரசாங்கத்தார் இம்மாதிரி மதவிஷயங்களில் தாறுமாகத் தலையிட இடமளிக்கக் கூடாதென்றும் ஆசார சீர்திருத்தக்காரர்கள் ப்ரமத்தினால் செய்யும் காரியங்களினால் தர்மமே அழிந்து போய் விடுவதாக விருப்பதால் ஸநாதநதர்மிகள் இப்பொழுது

விழித்துக்கொண்டு இந்த ஆபத்துகளை நிவர்த்திக்கமார்க்கம் தேடவேண்டுமென்றும் பேசினர். சட்ட ஸபைகளுகளுக்குத் தெரிந்தெடுக்கப் படுபவர்கள் மதவிஷயங்களில் தலையிடாதவர்களாக விருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அந்த ஸ்வாமி கேட்டுக்கொண்டார்.

முன்போலவே விவாஹங்களை நடத்திவரவேண்டுமென்பதை மாற்றி சட்டத்தை மீறி முன்போலவே சாஸ்த்ரரீதியில் விவாஹங்களை நடத்திவர வேண்டுமென்பதாகத் தீர்மானத்தை மாற்றவேண்டுமென்று வக்கீல் ஸ்ரீ உப. சாரங்கபாணி ஐயங்கார் ஸ்வாமி ஒரு திருத்தம் ப்ரேரித்து சாரதா சட்டத்தை மீறி அதைக்கார்யத்தில் நிஷ்பலமானதாகச் செய்யவேண்டுமென்றும் முன்போலவே விவாஹங்களைச் செய்யவேண்டுமென்று கூடமாகச் சொல்லுவதைவிட தெளிவாக மீறவேண்டுமென்று சொல்லிவிட வேண்டுமென்றும் சொன்னர். இவ்விதம் திருத்தப்பட்டபடி தீர்மானம் ஸபையோரால் ஆமோதிக்கப்பட்டது.

பிறகு வித்வான் ஸ்ரீ. உப. தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி "கண்ணன் கழளிணை........என்ற பாசுரார்த்தத்தைப்பற்றி இரண்டு மணிநேரம் ஸபைரஞ்சகமாக உபந்யஸித்தார். கண்ணன் திருவடிகளில் ஆழ்வாருக்கேற்பட்டுள்ள ஈடுபாட்டை வெகு அழகாகவும் விஸ்தாரமாகவும் புராணங்களைக் கொண்டும் அந்தஸ்வாமி எடுத்து ஸாதித்தார்.

பிறகு வித்வாந்நெடுந்தெரு ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்வநிஷ்டாபிஜ்ஞானம் என்ற விஷயமாக விஸ்தாரமாக உபந்யஸித்தபின் அக்ராஸனாதிபதியின் உப ஸம்ஹாரத்துடன் ஸபை முடிந்தது. பிறகு வித்வாந்களுக்கு ஸம்மானம் செய்யப்பட்டு ஸப்யர்களுக்கு சந்தன தாம்பூலம் விநியோகிக்கப்பட்டு ஸபை பூர்த்தியடைந்தது. இந்த ஸபையை அநுக்ரஹித்து ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகிய சிங்கர் ரூ. 50—அநுக்ரகபுரஸ்ஸரமாக அநுப்பத்திருவுள்ளம் பற்றினர். தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீ. உப. டி. கோதண்டராம ஐயங்கார் ஸ்வாமி ஸதஸ்ஸம்பந்தமான ஸகல ஸம்விதாநங்களையும் செய்து கொடுத்து ஸபைக்கு பேருபகாரத்தைச் செய்தது கொண்டாடக் கூடியதாகும்.

ஸ்ரீ வை. ஸி. ஸபையின் வார்ஷிக நிர்வாகக் கூட்டம்.

ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ஸபையின் வார்ஷிக நிர்வாஹக் கூட்டம் ஸபையின் அத்யக்ஷப் பிரதிநிதிகளில் ஒருவரான ஸ்ரீ உப. டி. கோதண்டராம ஐய்யங்கார் ஸ்வாமியின் அக்ராஸனத்தில் நடைபெற்றது. 19 வது வர்ஷ அறிக்கை ஸபையில் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு அடுத்த வர்ஷத்திற்குப் பின்வருமாறு நிர்வாஹிகள் நிர்த்தேசிக்கப்பட்டனர்.

போஷகர்.

ராவ்ஸாகிப் ஸ்ரீ உ. வே. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், டில்லி

117

ஸ்பாத்யக்ஷர்.

ஸ்ரீ உ. வே. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சென்னை

ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.

ஸ்ரீ. உ. வே. எஸ். ராஜகோபாலாசார்யர், மன்னார்குடி.
,, டி. கோதண்டராம அய்யங்கார், தஞ்சை.
,, ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.
,, வி. பாஷ்யமய்யங்கார், மதுரை.
,, ஸி. வி. வெங்கடரமணய்யங்கார், கோயமுத்தூர்.
,, எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, எஸ். வேதாந்த சார்யர், திருவையார்.

கார்யதரிசிகள்.

ஸ்ரீ. உ. வே. ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, எஸ். லக்ஷ்மீநரஸிம்மாசாரியர், திருவல்லிக்கேணி.

நிர்வாஹக கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், மாம்பலம்
,, கெ. டி. ஸுந்தரராஜாசாரியர், முத்தியாலுபேட்டை
,, எ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி
,, டி. வி. நீலமேகாசார்யர், கீழ்ப்பாக்கம்.
,, டி. ஆர். ராஜகோபாலாசார்யர், புரசைவாக்கம்
,, எஸ். வராஹஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி
,, பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர்
,, கே. வி. க்ருஷ்ணமாசாரியர், திருவல்லிக்கேணி
,, கே. எஸ். சம்பகேச அய்யங்கார், திருவல்லிக்கேணி
,, டி. இ. சடகோபாசாரியர், திருப்பாப்பிலியூர்
,, என். டி. ஸ்ரீ ராமாச்சாரியர், ,,
,, சக்ரவர்த்தி வி. ஸ்ரீ நிவாஸாசார்யர் கும்பகோணம்
,, கும்மட்டித்திடல் ஜி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்
,, எ. ராகவாசார்யர், கும்பகோணம்
,, ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை
,, எம். எஸ். சேஷய்யங்கார், எம். எல். ஏ. மதுரை
,, என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மதுரை
,, ஜெ. வரதராஜ அய்யங்கார், திருநெல்வேலி
,, வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,,
,, பி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கோயம்பத்தூர்

,, கிடாம்பி ராமாநுஜாசாரியர், மோஹனூர்

,, கே. வி. வெங்கடாசார், நாமக்கல்

,, கே. வீரராகவ அய்யங்கார், நாமக்கல்

,, வி. என். செல்லமய்யங்கார், சேலம்

,, கெ. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்

,, பி. எஸ். ராகவாச்சார்யர், ராசிபுரம்

,, ராவ்ஸாகிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஹைதராபாத்

,, நெரூர் நரஸிம்மாசார்யர் நெரூர்.

,, டி. தெய்வசாகம் அய்யங்கார், திருநெல்வேலி.

,, கோவிந்தா சார்யர், ஆழ்வார் திருநகரி.

,, பு. எஸ். தாத்தாசார்யர், திருநெல்வெலி.

,, பி. ராஜமன்னார் செட்டியார், சென்னை.

பத்ராதிபர்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியே பத்ராதிபராக இருந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டார்.

பிரசாரக் கமிட்டி.

ஸ்ரீ வை. ஸி. ஸபையை அபிவிருக்குக் கொண்டுவரவும் அதன் சார்பாக பலவிடங்களிலும் உபந்யாஸங்கள் செய்து ஸம்ப்ரதாய ப்ரவரானஞ் செய்யவும் வித்வாந்கள் அடங்கிய கமிட்டி ஒன்றை நிர்தேசிக்க வேண்டுமென்பதாக ஸ்ரீ உ. வே. தில்லைபமயூர் சக்ரவர்த்திசாரியஸ்வாமி பிரேரித்தார். ஸ்ரீ வை. ஸி. ஸபைக்கு போதிய அர்த்த ஸௌகர்யமில்லாததால் ஸ்வாமிகள் அனன்ய பிரயோஜனமாகவே இந்த ப்ரசாரம் செய்யவேண்டு மென்பதாக அந்த ஸ்வாமி ஸாதித்தார். வித்வாங்களான புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி, வெண்ணாத்தங்கரை ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி, அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்ய ஸ்வாமி, கராப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமி, நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஆகியவர்கள் இந்த ப்ரசாரக் கமிட்டியில் ஸ்தானம்வஹித்து ஸபைக்கு உபசரிக்கத் திருவுள்ளம்பற்றினர்.

ஸ்ரீ

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

ஸம்பாதகீயம்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஆத்மகுணங்களும் மஹாத்மா காந்தியும்

மநுஷ்யனுக்கு ஏற்றத்தைக் கொடுக்கும் ஹேதுக்களுள் ஆத்ம குணங்கள் முக்யமானவை. இவை எவனிடத்தில் நிறைந்து நிற்கின்றனவோ அவனே இந்த லோகத்தில் ஜனங்களால் ஹார்த்தமான ப்ரீதிக்கும் பஹுமதிக்கும் பாத்ரமாகக் கொண்டாடப்படுகிறான்; இவை எவனிடத்தில் ஸ்வல்பமேனும் காணப்படவில்லையோ அவனை ஒருவரும் கவனிக்கிறார்களில்லை. இது அநுபவ ஸித்தம்.

இது மாத்ரமன்றிக்கே, ஆத்ம குணம் நிறைந்துள்ள ஜனங்கள் வஸிக்குமிடத்தில், ஆத்யாத்மிகாதி தாபங்களால் ஜனங்களுக்கு ஸம்பவிக்கும் துன்பங்கள் ஒருவாறு சமநம் அடைந்து வருவதையும் நாம் பார்க்கிறோம். இவ்வுலகத்தில், ஜந்மாந்தர கர்மமடியாகவோ வேறு காரணங்களாலோ ஜனங்கள் எல்லாரும் தாபத்ரயத்திற்கு உட்பட்டவர்களாய், பலவித துன்பங்களை அநுபவித்து வருகிறார்கள். இவைகளுள் பல அபரிஹார்யங்களேயாயினும், அவைகளின் உக்ரத்தன்மையை நாம் பரஸ்பரம் செய்துகொள்ளும் ஸௌஹார்த்தத்தால் கொஞ்சம் குறைத்துக் கொள்ளக் கூடும் என்பது நிச்சயம். அப்படி ஸௌஹார்த்தம் கொள்ளாமல் நாம் ஒருவரை ஒருவர் வெறுத்துக்கொண்டு வர்த்தித்தோமேயானால், தைவகதியால் நமக்கு நேரும் துன்பங்களை நாம் வீணில் அதிகம் செய்து கொள்ளுகிறோமே தவிர ஒருவருக்கொருவர் ஒரு விதத்திலும் உபகாரம் செய்து கொள்ளுகிறவராகிறோமில்லை. அந்த ஸௌஹார்த்தமும் நமது ஆத்ம குண ஸம்பத்தியைச் சார்ந்திருக்கிறபடியால், இந்த லோகத்தில் நமக்கு ஸம்பவிக்கக்கூடிய துக்கங்களைக் கொஞ்சமாவது சமநம் செய்து கொள்ள நாம் விரும்பினால், அந்த ஆத்ம குணபூர்த்தியை நாம் அடைய முயல்வது அவச்யமாகின்றது.

“ஸம்ஸார ஏஷ ஸுகவத்பவதீஹ ஸதாம்”

என்று பெரியோர்கள் அநுக்ரஹித்திருப்பதெல்லாம் இந்த ஸாத்விக தர்மம் மேலிட்டால் மாத்ரம் ஸாத்யமாகும்.

120

அந்த ஆத்ம குணங்கள் யாவை என்பதை மஹர்ஷி கௌதமர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"அஷ்டாவாத்மகுணா: — தயா ஸர்வபூதேஷு, க்ஷாந்தி:, அநஸூயா, சௌசம், அநாயாஸ:, மங்களம், அகார்பண்யம், அஸ்ப்ருஹா" இதி.

இவைகளின் ஸ்வரூபத்தை மஹர்ஷி ப்ருஹஸ்பதி, எட்டு ச்லோகங்களால் விசதமாக விவரித்திருக்கிறார். அந்த விவரணத்தின் ஸங்க்ரஹமாவது:—சத்ரு மித்ராதிகளின் ஆபத்தை நிவாரணம் செய்வது தயை; அபகாரம் செய்பவன் விஷயத்தில் கோபமற்றிருப்பது க்ஷாந்தி; இதரர்களுடைய அப்யுதயத்தில் த்வேஷிக்காமல் இருப்பது அநஸூயை; அபக்ஷ்ய பரிஹாரமும் ஸத்ஸங்கமும் ஸ்வதர்மாநுஷ்டானமும் சௌசம்; மிகவும் பீடாகரமான கார்யத்தில் ப்ரவ்ருத்தியாமல் இருப்பது அநாயாஸம்; லோக ப்ரசஸ்தமான கார்யத்தைச் செய்வது மங்களம்; ப்ரீதிபூர்வகமான தானம் அகார்ப்பண்யம்; பரதநத்தை அபேக்ஷியாமல் இருப்பது அஸ்ப்ருஹை.

இப்படி இந்த எட்டு ஆத்ம குணங்களை உதாஹரித்துவிட்டு ஸ்ரீகௌதமர், இவைகளின் ப்ராதாந்யத்தை,

"யஸ்யைதே நாஷ்டாவாத்மகுணா:, ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி।"

[இந்த எட்டு ஆத்மகுணங்கள் எவனிடம் இல்லையோ, அவனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி இல்லை] என்று வ்யக்தமாகச் சொல்லி இருக்கிறார்.

ஸ்ரீபகவானும், தமது கீதையில், ஆத்மஜ்ஞானத்துக்கு உபயோகியாயுள்ள குணங்களை விவரிக்குமிடத்தில் இந்தக் குணங்களை,

"அமாநித்வம் அதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்"

இத்யாதியான ச்லோகங்களால் அநுக்ரஹித்திருக்கிறான். அவைகளுள் முக்யமான சிலவற்றை இவ்விடத்தில் ஸங்க்ரஹிப்போம்.

அமாநித்வம்—மானித்வம் என்பதற்கு கர்வம் என்பது பொருள். அது இராமலிருப்பது அமானித்வம். அதாவது, வித்யை உயர்பிறப்பு தனம் இவை முதலியவைகளின் ஸம்ருத்தி காரணமாக மற்றவர்களை அவமதியாமல் இருப்பது என்று சொன்னதாயிற்று. அதம்பித்வம்—தர்மத்தைத் தர்மமென்னும் எண்ணத்துடன் செய்யாமல், யசஸ் முதலிய ப்ரயோஜனத்தை உத்தேசித்துச் செய்வது தம்பித்வம். அப்படிச் செய்யாமல் இருப்பது அதம்பித்வம். அஹிம்ஸா—அநர்த்தத்தையே பலமாக உடைய பீடையை, வார்த்தையினாலோ மனஸினாலோ காயத்தினாலோ நாம் பிறருக்குச் செய்வது ஹிம்ஸை. தமக்கே தாம் அநர்த்தத்தைச் செய்து கொள்பவரும் இந்த ஜகத்தில் இருக்கிறார்கள் என்று எண்ணி, அம்மாதிரி தமக்கே அநர்த்தம் செய்து கொள்வதையும் நமது பெரியோர்கள் ஹிம்ஸையில் சேர்த்திருக்கிறார்கள். க்ஷாந்தி:—மற்றவர்கள் தம்

மைப் பீடித்த போதிலும் அவர்களைக் குறித்து எவ்வித சித்த விகாரத்தையும் செய்யாமல் இருப்பது க்ஷாந்தி. "[illegible] ॥" என்கிறபடி நமக்கு த்ரோஹம் செய்பவர்களிடமும் நாம் கரைபுரண்ட க்ருபையைச் செய்யவேண்டுமென்றன்றோ நமது சாஸ்த்ரம் சொல்லுகின்றது? ஆர்ஜவம்:—மநஸ்ஸில் நினைப்பதுபோல் வாயால் பேசுவதும், வாயால் பேசுவதுபோல கார்யத்தில் நடப்பதும் ஆர்ஜவம். 'ஸர்வம் ஜிஹ்மம் ம்ருத்யுபதம் ॥ என்கிறபடி' ஸ்வகார்யத்தை உத்தேசித்தோ லௌகிக மர்யாதையைக் கவனித்தோ வேறுக் எந்த காரணத்தினாலோ நமது மநோ பாவத்துக்கு விருத்தமாக நாம் பேசுவது நடப்பது முதலியவை யெல்லாம் துஷ்டமானவைகளே. மற்றவர்களை ஏமாற்றும் எண்ணம் அதில் இருந்தாலும் இராவிட்டாலும் அது அந்தரங்க விருத்தமானதால், அது ஒருகாலும் பகவானுடைய ப்ரீதிக்குக் காரணமாக மாட்டாது. ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்ஶநம்—பிறப்பு இறப்பு வ்யாதி முதலியவை நமக்கு ஸஹஜமென்றும், நம்மால் விலக்கக் கூடாதவை யென்றும், த்ருடமாக உணர்வதும் ஒரு ஆத்மகுணமே. அவ்விதம் உணர்ந்து நாம் தீரர்களாய் இருந்தாலொழிய நாம் நமது கடமைகளைச் சரிவர செய்ய மாட்டோம் என்பது கருத்து. புத்ரதாரக்ருஹாதிஷு அநபிஷ்வங்க:—அபிஷ்வங்கம் என்பதற்கு அதிமாத்ரம் ஸங்கம் செய்தல் என்பது பொருள். பிள்ளை மனைவி வீடு வாசல் முதலியவைகளில் எல்லைக்கு உட்பட்டு பற்றுதலைச் செய்வது சாஸ்த்ரீயமே. அளவுக்கு விஞ்சி அவைகளில் பற்றுவது குணமாகமாட்டாது என்பது தான் இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது. இஷ்டாநிஷ்டோபபத்திஷு ஸமசித்தத்வம்—இஷ்டாநிஷ்டங்கள் இரு வகைப்படும். அவையாவன:—ஸம்ஸ்பர்சத்தால் உண்டாகுமவை, ஸங்கல்பத்தால் உண்டாகுமவை. இவைகளுள் ஸம்ஸ்பர்சத்தால் உண்டாகுமவைகளில் ஸமசித்தம் செய்வது என்பது அசக்யம். நெருப்பு சுடும் காலத்தில், குளிர்ந்த பதார்த்தங்களைத் தொடுவதுபோல பாவிப்பது ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள நமக்கு ஸாத்யமாகமாட்டுமோ? அதைச் சாஸ்த்ரம் விதித்தால் அதனால் ப்ரயோஜநம் என்? ஆகையால் இவ்விடத்தில் விதித்திருக்கும் ஸமசித்தத்வம் இரண்டாவது வகையைச் சேர்ந்த ஸங்கல்ப ப்ரபவங்களான இஷ்டாநிஷ்ட விஷயங்களைப் பற்றியது என்று நாம் அறியவேண்டும்.

இப்படி ஸமசித்தத்வத்தையும் திதிக்ஷையையும் சுத்தமான ஆர்ஜவத்தையும் க்ஷாந்தியையும் அஹிம்ஸையையும் அமாநித்வ அதம்பித்வங்களையும் ஒருவன் உடைத்தாயிருந்தானேயாகில், அவன் இருக்கும் இடத்தில் ஸகலவிதமான ச்ரேயஸ்ஸும் நடையாடும் என்பதில் ஸந்தேஹமும் உண்டோ?

இக்காலத்தில் இந்த ச்ரேஷ்ட குணங்களை உடைய வ்யக்திகள் யாராவது ஒருவர் இந்த லோகத்தில் தென்படுகிறார்களோ வென்று நாம் பராமர்சித்துப் பார்த்தால், நமது புத்தி, இப்பொழுது மஹாஜநங்களால் "மஹாத்மா" என்று

கொண்டாடப்பட்டுவரும் காந்தி, என்னும் ஒரு புருஷனிடத்திலேயே சென்று நிற்கின்றது. அவர் நமது வேதாந்த வித்யையில் எவ்வித அப்யாஸத்தையும் செய்யாதவராகவும், மோக்ஷம் என்னும் பரம புருஷார்த்தத்தில் மநஸ்ஸைச் செலுத்தாதவராகவும், ஆசாரங்களில் தர்ம சாஸ்த்ரம் சொல்வதற்குக் கட்டுப்பட்டு நடக்காதவராகவும் இருக்கலாம். இந்த ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத் அவரிடம் எவ்வளவு ந்யூநமாக இருந்தபோதிலும், அவருடைய ஆத்மகுண பூர்த்தியை ஒருவித குறைவுடன் கூடியிருப்பதாகச் சொல்வதற்கு ஒருவரும் சக்தராகார். இது வரையில், அவரை அறிந்தவர்களுள் ஒருவரும், அவரைப் பணத்தில் பேராசை பிடித்தவரென்றாவது, ஸ்வார்த்த பரரென்றாவது, அஸத்யம் பேசுகிறவரென்றாவது, மற்றவர்களுக்கு ஹிம்ஸையைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவரென்றாவது சொன்னது இல்லை. தமக்கு ந்யாய்யமென்று தோன்றும் மார்க்கத்திலிருந்து, அவர், க்யாதி லாபம் பூஜை இவை முதலியவைகளை உத்தேசித்து அணுமாத்ரம் சலித்தவரன்று. அஹிம்ஸையிலும் அந்தரங்க சுத்தியிலும் அவரை ஒரு நரோத்தமனென்றே சொல்லவேண்டும். தமக்கு அத்யந்தம் அப்ரியம் செய்பவர்களிடத்திலும் அவர் எவ்வித விகாரத்தையும் அடையாமலிருக்கும் மநோபாவத்தையே உடைத்தாயிருக்கிறார். புராணங்களில், மஹர்ஷிகளிடம் எவ்வித குணச்சிறப்பு இருந்ததாக நாம் படித்திருக்கிறோமோ, அவையெல்லாம் பரமமான சுத்தியுடன் இவரிடம் குடிகொண்டிருக்கின்றன. லோகத்தில் தீந ஜநங்களைப் பார்த்து "ஐயோ!" என்று பரிதாபப்படும் பல ஸாத்விகர்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அந்த தைந்யத்தால் தாம் அந்தரங்க சுத்தமாக அதிமாத்ரம் துக்கிதராய், அந்தத் தீந பாவத்தை அந்த ஜநங்களிடமிருந்து தம்மால் இயன்ற வரையில் விலக்குவதற்கு தமது யாவச் சக்தியையும் தநத்தையும் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டுவரும் ஸாத்விகோத்தமர்களை நாம் அதிகமாகப் பார்த்திருக்கிறோமில்லை. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன்

"ஹஸ்த தக்ஷ ராதாம் பரிவீ"

என்று சொன்னதுபோல, இவர் ஒருவரே, தமது ப்ராத்ரு ஸ்தாநீயர்களான மஹாஜநங்களுக்கு இல்லாத போகங்கள் தமக்கும் வேண்டுவதில்லை என்று தமக்கு ப்ராப்தமாயிருந்த போகங்களெல்லாவற்றையும் துறந்து, அந்தத் தீந ஜநங்கள் போல தாமும் ஒரு தீநராய், அவர்கள் உடுத்தும் ஆடையையும் புஜிக்கும் அந்நத்தையும் தாமும் உடுத்தியும் புஜித்தும் கொண்டு, அவர்களுடைய தைந்யத்திற்குக் காரணமாகத் தோன்றும் ஹேதுக்களை நிவ்ருத்திப்பிப்ப தொன்றையே தமது முக்ய வ்ரதமாகக் கொண்டவராய் தமது ஆயுள் நாள் முழுவதையும் கழித்து வருகிறார். இப்படிப்பட்ட வ்ரதத்தைத் தங்கள் மதமொன்றே அஸாதாரணக்கொள்கையாகக் கொண்டிருக்கின்றது என்று எண்ணியிருக்கும் க்ரிஸ்தவ மதப் பெரியோர்களுட் பலர், இவரிடத்தில் இந்த வ்ரதம் தீவ்ரமான அநுஷ்டாநம் பெற்று வருவதைப் பார்த்து, 'இவர் வெளிப்பட்ட வேஷத்தில் ஹிந்து மதத்தையே சேர்ந்தவராயினும் அந்தரங்கத்தில் கிரிஸ்த்வ மதத்தையே சேர்ந்தவர்' என்று கொண்டாடி வருகிறார்கள். இவருடைய பெருமை இந்தத்

தேசத்தில் மாத்ரமின்றிக்கு தேசாந்தரங்களிலும் பஹுவாகப் பரவி இருக்கின்றதன்றோ? மஹத்தான ஸுக்ருத பரிபாகமும் அது காரணமாக பகவத் கடாக்ஷமும் நேராவிட்டால், இம்மாதிரியான ஸாத்விகத்தன்மை ஒருவருக்கும் ஸம்பவிக்கமாட்டாதாகையால், இவரை பகவத் ப்ரியர்களுள் ஒருவரென்றே நாம் நிஸ்ஸந்தேஹமாக க்ரஹிக்கின்றோம். கேவலம் வேஷத்தில் மாத்ரமின்றிக்கு அந்தரங்க சுத்தமாக இவர் இந்தக் குணங்களை உடைத்தாயிருப்பதே இவருக்கு இம்மாதிரியான ஏற்றத்தை ஜநிப்பிக்கின்றது.

இந்த மஹாந் இப்பொழுது நமது ராஜாங்கத்தாரால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 'என்ன காரணத்தால் அவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்? அவரை அவ்விதம் சிறைச்சாலையில் அடைப்பது ந்யாய்யமா? ந்யாய்யமன்றா?' என்பது முதலியவற்றை நாம் இப்பொழுது விசாரிக்கப் புகுகிறோமில்லை. இது ஸம்பந்தமாக நமது மநஸ்ஸில் ஜநிக்கும் ஒரு வியப்பை மாத்ரம் வெளியிடத் துணிகின்றோம். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள வ்யக்தி, மஹார்ஷிபோன்ற ஸாத்விகோத்தமர்; அவரை சிறைச்சாலையில் அடைத்திருக்கும் ராஜாங்கத்தாரும், அவரிடத்திலிருக்கும் ஸாத்விக குணத்தை தைவ ஸம்பத்தென்று கொண்டாடும் ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவரும் சிறைச்சாலை வாஸத்துக்கு அநர்ஹர்; இவர்களும் இம்மாதிரியான ஸாத்விகரை சிக்ஷைக்கு உட்படுத்துவதற்கு அநர்ஹர்கள். அப்படி இருக்கையிலும் இந்த ஸம்பவம் ஸம்பவித்திருக்கின்றதே என்பது தான் நமது வியப்புக்குக் காரணமாகின்றது. அகடிதங்களைக் கடநை செய்யும் சக்தியை உடைய ஸர்வ நியந்தாவின் ஐச்வர யோகத்தை யார் தான் பரிசேதிக்கச் சக்தராவார்?

* * * *

ஹிந்து தர்ம சோத்துக்களின் பரிபாலந விசாரண ஸபை

நமது மத ஸம்பத்துங்களான தர்ம சொத்துக்களின் பரிபாலநத்தைப் பராமர்சித்து வருவதற்காக, நமது ராஜாங்கத்தார் ஐந்து அங்கத்தினர் அடங்கியுள்ள ஸபை ஒன்றை ஸ்வல்ப காலமாய் நியமித்திருக்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது அந்த ஸபையில் புதிதாக நியமிக்கப்பட்டவர்களுள் நமது ஸுஹ்ருத்தான புரசைபாக்கம் ஸ்ரீமாந் என். ஸ்ரீநிவாஸாசார்யர் என்பவர் ஒருவராக ஸம்பவித்திருப்பதைப் பார்த்து நாம் மிகவும் ஆநந்திக்கிறோம். நாம் அப்படி ஆநந்திப்பதற்கு முக்யமான காரணம், அவர் அந்த ஸ்தாநத்துக்கு அத்யந்தம் அர்ஹர் என்பதே. நமது தக்ஷிணதேசத்தில், இந்த ஸபை யாருடைய பராமர்சத்துக்கு உட்பட்டு வரும் தர்ம சொத்துக்களுள், விஷ்ணு ஆலயம் சிவ ஆலயம் இவைகள் சம்பந்தப்பட்ட சொத்துக்களே மிக அதிகம். ஆகையால் அந்தச் சபையின் அங்கத்தினர்கள் அவ்வாலயங்களில் நடைபெற வேண்டிய விதிகளைச்சரிவர அறிந்தவர்களாக இருத்தல்வேண்டும் என்பது அவச்யமாகின்றது. இவர் அந்த விதிகளை

யும் அவை நடைபெற வேண்டிய முறைமையையும் நன்றாக அறிந்தவராதலால் அவர் அந்த அதிகாரத்துக்கு மிகவும் தகுந்தவரென்பது நமது அபிப்ராயம். தவிரவும், இவர், வர்ணாச்ரம தர்மங்களில் பூர்ணமான விச்வாஸமுள்ள வைதிகர்களுள் ஒருவர். இந்த அதிகாரத்துக்கு அப்படிப்பட்ட வைதிக ச்ரீயும் அதிமாத்ரம் அபேக்ஷிதம். லௌகிக வ்யவஹாரங்களிலும் இவர் தேர்ந்த ஜ்ஞாநத்தை உடையவராதலால் இவருடைய நியமநம் ஸர்வ விதங்களிலும் அநுரூபமாக இருக்கின்றது என்றே நாம் ஸந்தோஷத்தை அடைகின்றோம்.

* * * *

ச்ருத ப்ரகாசிகா ஸஹித ஸ்ரீபாஷ்யம்.

ச்ருத ப்ரகாசிகா ஸஹிதமான ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழி பெயர்ப்பின் ஒரு ஸஞ்சிகையை நாம் இப்பொழுது வரப்பெற்றோம். இது, திருச்சி மஹா வித்வாந் ஸாரஸ்வத ஸாரஜ்ஞ கவி சிகாமணி ஸ்ரீ. உ. வே. டி. வி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் எழுதப் பெற்று ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியின் பராமர்சத்துடன் ப்ரசுரிப்பிக்கப் பட்டு வருகின்றது. இந்த ஸஞ்சிகையுடன் ஜிஜ்ஞாஸாதிகரணம் பூர்த்தியாகி இருக்கிறது. நாம் பார்த்த வரையில் தமிழ் மொழி பெயர்ப்பு, மூல க்ரந்தத்தின் தாத்பர்யத்துக்கு அவிருத்தமாகவே இருக்கின்றதென்றும், கூடமாயும்சாஸ்த்ர ஜடிலமாயுமுள்ள விஷயங்களெல்லாம் எளிதான தமிழ் நடையில் தெளிவாக விவரிக்கப்பட்டிக்கின்றன வென்றும் நாம் அறிகிறோம். க்ரந்தம் ஸமுத்ரம் போல விஸ்த்ருதமாகையாலும், த்ரவ்ய ஸஹாயம் செய்யும் மஹாங்கள் ம்ருக்யர்களாக இருக்கிறபடியாலும் இதை வெளியிடுவதில் கொஞ்சம் விளம்பம் நேரக் கூடும். அப்படி அதிகமாக விளம்பம் நேராமல், சீக்ரத்திலேயே க்ரந்தம் பூர்த்தி அடைய வேண்டும் என்பது நமது ப்ரார்த்தநை. க்ரந்தத்தின் விலை முதலிய அம்சங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள இஷ்டப்படுகிறவர்கள் பின் வரும் விலாஸத்திற்கு எழுதித் தெரிந்த கொள்ளலாம்:—ஸ்ரீ உப வே வித்வாந் டி. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸம்ஸ்க்ருத பண்டிதர், செண்ட்ஜோசெப்ஸ் காலேஜ், திருச்சி.